# தென்மொழி




## தமிழக அமைச்சர்களே
## இந்திக்கு வால் பிடிக்காதீர்கள்!

'இந்தித் திணிப்பே இல்லை'யென் றிங்கே
எந்தமிழ் அமைச்சரும் இளிக்கின்றார் பல்லை!
குந்தித் தின்னும் கொழுப்பினால் இவர்கள்
குருட்டுத் தனமாய்க் கூறலாம் அப்படி!
'இந்திப் படிப்புக் கிலவயம், சலுகை;
இந்தி படித்தால் கூடுதல் சம்பளம்;
இந்திக் குயர்நிலை பதவி' என்றெல்லாம்
இருக்கும் நிலைகளை என்னென் றழைப்பதோ?

எந்தமிழ் மொழியும் இனமும் இந்தியால்
இரண்டாம் படிநிலை எய்துவ துண்மை!
எந்த வடிவிலும் வழியிலும் இந்தி
இங்கே வருவதை உயிர்கொண் டெதிர்ப்பதும்,
செந்தமிழ் மொழியைச் சிறக்கக் காப்பதும்
செந்தமிழ் நாட்டின் அமைச்சர்கள் வேலை!
சொந்த நலத்தையும் சோற்றையும் விரும்பும்
சூதர்கள் இதனைச் செய, இயலாதே!

இந்திக் கிருக்கும் எல்லாச் சலுகையும்
எந்தமிழ் மொழிக்கும் இவர்பெறல் வேண்டும்!
இந்தியப் பொதுமொழி இந்திஎன் றில்லா(து)
எல்லா மொழிகளும் பொதுமொழி என்னும்
முந்தைய நிலையே தொடர்ந்திடல் வேண்டும்!
மூடர்கள் விரும்பினால் இந்தியைத் தம்தம்
சொந்த முயற்சியால் கற்றுச் சிறக்கெனச்
சூழ்ச்சி வடவர்க்குச் சொல்லுவீர் அமைச்சரே!


சுவடி : 14.
ஓலை : 11.
விலை : உரு. 1.

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

# நமக்கு வந்த மடல்கள்.

**0:574:** மதிப்பிற்குரிய ஐயா அவர்களுக்கு, அன்பு வணக்கங்கள். கருணாநிதியை நாலரைக் கோடி மக்களின் தலைவர் என்கிறீர்கள், ஒரு நாலாந்தர தி.மு.க. மேடைப் பேச்சாளரைப் போல! சரி, அ·து ஒரு கருத்து! அடுத்து, இம்மாத இதழில் செய்தியாக வந்த ஓர் அதிர்ச்சி; தாங்கள் R.S.S. நடத்திய பொங்கல் விழாவில் கலந்து கொண்டதும் அதைப் புகழ்ந்ததும்...... நான் மனம் விட்டுச் சிரிக்கிறேன்... ஏன் என்று கேட்கிறீர்களா? எதைச் சொல்ல! எந்த இந்து மதம் தமிழர்களை, தமிழ் மொழியைக் கெடுத்து நீர்மைப் படுத்தி ஒதுக்கி முடமாக வைத்திருக்கிறது என்று தாங்கள் ஓயாமல் முழங்குகிறீர்களோ, அம்மதத்தின் காவல் படையின் பாடி வீடே இந்த R.S.S. அங்கே தங்கள் தலைமையிருப்பின் தனித் தமிழும் பொதுவுணர்வும் பேசலாம். ஆனால் அதுவே R.S.S-இன் கொள்கையோ நடைமுறையோ ஆகாது. அ·து ஒரு மலக்குழி. அதில் தாங்கள் இறங்கிய தேவை என்ன? சூழ்ச்சி என்ன? பெற்ற வெற்றி என்ன? இதையெல்லாம் ஒரு கணம் மனத்தில் வாங்கித்தான், அகலக் கால் பரப்பி வானம் பார்த்து வெடித்துச் சிரிக்கிறேன்! தாங்கள் சொல்வதுபோலவே சொல்கிறேன் ஒன்று, அரசியலில் செயல்படுங்கள் அல்லது, மெய்யறிவை விளக்குங்கள்.

—செம்பியன் வல்லத்தரசு, பு. புளியம்பட்டி.

**0:575;** ஐயா, தென்மொழி சுவடி 14; ஓலை 10 கும்பம் இதழ் கண்டேன். அதில் என்றுமில்லாதபடி அச்சுப்பிழைகள் மலிந்துள்ளன. அச்சுப்பிழைகளே இல்லாமல் தமிழில் ஓரிதழ் வரும் என்றால் அது 'தென்மொழி' ஒன்றுதான் என்று கருதி வந்த எனக்கு மேற்கண்ட இதழைப் படித்ததும் வருத்தம் மிகுந்தது. இனி வரும் இதழ்கள் அச்சுப் பிழையின்றி வரும் என்று எதிர்பார்க்கிறேன்.

—செ. பாலசுந்தரம், சென்னை-88.

**0:576:** ஐயா அவர்களுக்கு வணக்கம். முதலில் என்னை மன்னியுங்கள். இதுவரை நான் ஒரு முட்டாளாக இருந்துவிட்டேன். அரசியல் சாக்கடைகள் நம் நாட்டில் ஊற்றெடுத்து, நம்மொழியையும் பண்பாட்டையும் நாறடித்துக் கொண்டிருக்கிற நிலையிலும், தாளிகைகளின் நரகல் நடைப் போக்கினைக் குறித்து வெறுப்படைந்த நிலையிலும் வாழ்ந்துகொண்டிருந்த எனக்குத் தென்மொழி இயவத்தைச் சேர்ந்த நண்பர்களால் தென்மொழியின் பழைய சுவடிகள் கிடைத்தன. அதிலுள்ள கருத்துகள் என்னை ஊக்கப்படுத்துகின்றனவாக இருப்பதை நினைக்கின்ற பொழுது இதுவரை தங்களையும், தென்மொழியையும் அறிந்து கொள்ளாத என் மடத்தனத்தை எண்ணி வெட்கப்படுகிறேன். —மு. பாண்டியன், ஒண்டிப்புதூர், கோவை-16.

**0:577;** ஈரோட்டு நிகழ்ச்சி பற்றிய குறிப்பு இங்கு எங்கள் எல்லாருக்குமே பெரிய ஆற்றாமையாக இருந்தது. அருமையான வாய்ப்பு அருகில் கிடைத்தும் அதனைத் துய்க்க இயலாமற்போனது மிக்க அவலத்தையே தருகின்றது- ஈரோடு சென்று புலவர். செ, இராசு அவர்களைக் கண்டு உரையாடினோம். தங்கள் உரை அத்துணை மிக மிகச்சிறப்பாக அமையும்-நீண்ட நேரம் அமையும் என எதிர்பாராததால் நாடாப் பதிவு செய்யாமற் போனோம் என வருந்திக் கூறினார்.

—பொன். முகிலன். கூகலூர்.

(தொடர்ச்சி அட்டை 4-ஆம் பக்கம் பார்க்க)

# அருள்க செந்தமிழே!

எங்கு, எந் தமிழர் இருக்கின் றூர்களோ,
எங்கு, அவர் துயரால் இழிகின் றூர்களோ,
எங்கு, அவர் உரிமை இழக்கின் றூர்களோ,
இனம் விளங் காமல், மொழிதெரி யாமல்,
எங்கு, அவர் பல்வே றினத்திற் கடிமையாய்
எம்முன் னேற்றமும் இன்றி உள் ளார்களோ—
அங்கு, என் அறிவும், உள்ளமும், உயிரும்
அளாவி யிருக்க அருள்க, செந் தமிழே!

மானந் துறந்து, தமிழ்தோய் மண்ணின்
மண்டிய பழம்பெரும் மாண்பை இழந்து,
கூனல் விழுந்து, குரலும் மழுங்கிக்
கூப்பிய கையும் காலுமாய், எங்கு, செந்
தேனெனும் மொழியைப் படைத்த எந் தமிழர்
திறங்கித் தேய்ந்து திகைக்கின் றூர்களோ—
ஆனநற் பெருமை அனைத்தும் சான்ற, என்
அன்னைத் தமிழே, ஆங்கெனைச் சேர்த்துக!

ஒற்றைத் தமியராய் உலக உருண்டைமேல்
ஓடிக் களைத்துக் கைகால் சோர்ந்தும்,
அற்றைப் பெருமை முழுமையும் மறந்தும்,
அன்றைச் சோற்றுக்கே அடிமுடி பதித்தும்,
எற்றைக் கெம்நிலை ஏற்றம் உறும்—என
ஏங்கிக் கிடக்கும் எந் தமிழரின் பாங்கில்,
சுற்றமாய் உறவாய்த் தொண்டனுய் நின்று, தோள்
சுமக்கும் பெருமையை அருள்க, தாய்த் தமிழே!

வாடிய பயிர்க்கே வந்தநல் மழையென—
வறுபிணி யாளர்க்கு வாழ்க்கை மருந்தென—
தேடிய குழவியைத் தேற்றிடுந் தாயெனத்—
தெறல்நெடும் பாலையில் திகழ்ந்திடும் பொழிலெனப்—
பேடியர் சூழ்ச்சியால் பிரிந்தஎன் தாயினம்
பீடுற் றுய்ந்திடும் நினைவினுல் உயிர்க்கும்என்
ஓடிய மூச்சையும் உணர்வுதோய் நெஞ்சையும்
உகுத்திட விழைகிறேன்; உதவுக அன்னையே!

"கெஞ்சுவதில்லை பிறர்பால்!
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே
தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர்நின்றே!



**சுவடி : 14 ஓலை : 11.**

தென்மொழி
இலக்கிய இதழ்

[ நிறுவனம் தி. பி. 1990 (1959) ]

மீனம் தி. பி. உ00க-மார்ச்சு-1978.

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்.

ஆசிரியர் : மா. பூங்குன்றன். அறி.இ. (க.மு.)

தென்மொழி மின் அச்சகம், சென்னை-5, தமிழகம்.

[பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும்.
பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன,]

# வேத-மத-இந்தியா 2.



இந்துமத முயற்சிகள் என்னும் போர்வையில், ஆரியப் பார்ப்பனரின் வேதமதக் கொள்கைகளே வேர் ஊன்றப் பரப்பப்பெற்று வருகின்றன. வேதமதம் என்பதும் புராணமதம், பௌராணிக மதம் என்பவையும் ஒன்றே! அதுவே இக்கால் இந்து மதம் என்னும் பெயர் பெற்று, இந்திய அரசியலிலும் குமுகாயத்திலும் பார்ப்பனியத் தலைமையை என்றென்றும் நிலையாக்கிக் கொண்டு வருகிறது. இந்திய அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப் படும் பொழுதே, பிராமணர்கள் விழிப்பாயிருந்து இந்து மதத்திற்கும், அது சார்ந்த சாதியமைப்புகளுக்கும் வேத, ஆகம, புராண, இதிகாசங்கள் தழுவிய பிராமணீயத்திற்கும் பெருங்காப்புச் செய்துகொண்டனர். இந்துமதம் என்பது எப்படி வேதமதமோ, அப்படியே 'இந்து தர்மம்' என்பதும் வேததர்மமே! வேததர்மம் என்பது பிராமண தர்மமே! பிராமண தர்மம் என்பது மனு முதலிய மிருதிகளின் தர்மமே! இனி மனுதர்மம்

முதலிய பதினெண் மிருதிகளும், பிராமணனே இங்குள்ளவர்களுக் தெய்வம் என்பதையும், அவன் பேசும் சமசுக்கிருதமே தேவ மொழி என்பதையும், சூத்திரர்களாகிய நாம் என்றென்றும் அவனுக்கும் அவன் மொழியாகிய சமசுக்கிருத மொழிக்கும் நிலையான அடிமைகள் என்பனவற்றையுமே வலியுறுத்தும்!

எனவே, இந்திய அரசியல் ஆளுமை முயற்சிகளில் இந்து மதக் கோட்பாடுகள் தலையிடாதபடி பார்த்துக்கொள்ளல் வேண்டும். அதற்காகப் பலவகை முயற்சிகள் தேவை. மிகவும் முன்னெச்சரிக்கை யான செயற்பாடுகளை நாம் செய்து கொண்டாலொழிய, இங்கு இந்து மதச்சார்பான கொள்கைகளையே நடுவணரசு தொடர்ந்து கடைப்பிடித்துவரும். அத்தகைய ஏற்பாடுகளே படிப்படியாகச் செய்யப்பெற்று வருகின்றன. சமயச் சார்பற்ற அரசு என்று அரசியல் சட்ட அமைப்பில் கூறப்பெறுவது, பிராமணிய மதமான இந்து மதக் கொள்கைகளைப் பல்லாற்றானும் பரப்புவதற்காகவே பயன்படுத்தப்பட்டு வருகிறது.

பொதுவாகவே, மாந்தன் செய்யும் அரசியல் ஆளுமை முயற்சிகளில் எந்த மதமோ, அதன் 'தர்மம்' என்னும் கோட்பாடு களோ தலையிடவே கூடாது. ஏனெனில் அவ்விரண்டும் இடத் துக்கு இடம், காலத்துக்குக் காலம், மக்களுக்கு மக்கள் மாறுபடு வன. அவற்றை அரசியல், பொருளியல், குமுகவியல், நயன்மை (நீதி) முதலிய துறைகளில் புகுத்தி, மக்களைப் பகுத்தறிவற்ற வர்களாகவும், ஒரு சாரார்க்கு மற்றொரு சாராரை அடிமைப் பட்டவர்களாகவும் செய்துவிடல் கூடாது. ஏனெனில் அரசியல் நெறிமுறைகள் பெரும்பாலும் நிகழ்காலத்தைப் பற்றித் தீர்மானிக்கும் தன்மையுடையவையாக இருத்தல் வேண்டும். சமயம் என்பதும், அது கூறும் 'தர்மம்' என்னும் மதக்கோட்பாடும், கடந்தகால எதிர் காலத் தொடர்புடையவை. இன்னுஞ் சொன்னால் முற்பிறவி, பிற் பிறவிக் கற்பனை சான்றவை. அவை ஏற்கனவே வகுக்கப்பட்ட மக்களின வேறுபாட்டுக் கொள்கை உடையவை. எனவே அவற்றை உட்படுத்தி எந்த வகையான நடைமுறை அரசியல் கொள்கையையும் வகுப்பதற்கு நாம் ஒப்புக் கொள்ளக்கூடாது. அவ்வாறு வகுக்கப் புகுந்தால், மக்களில் ஒரு பகுதியினர் தங்களைப் பிறவியில் மேம் பட்டவர்களாகக் கருதியும், தெய்வங்களுக்கு மிக நெருக்கமுடையவர் களாகப் புனைந்துரைத்தும், மற்ற பகுதியினரைத் தாழ்ந்த இழிவான பிறவியாளர்களாகவும், தெய்வத் தொடர்பற்றவர்களாகவும் கூறி, அடிமைப்படுத்தி, என்றென்றும், தாங்களே நிலையான ஆட்சியாளர் களாகத் தங்களைச் செய்துகொள்ள வேண்டியிருக்கும். அந்த வகையில்தான் இந்தியாவின் இப்பொழுதைய நடைமுறை அரசியல்

கொள்கைகள் இருந்து வருகின்றன என்பதை, அறிவுக் கவலை கொண்ட — நடுநிலை உள்ளங்கொண்ட — சான்றோர்கள் நன்கு உணர்தல் வேண்டும்.

இக்கால் இந்தியாவின் அரசியல், பொருளியல், குமுகவியல், கலை, பண்பாடு, வெளிநாட்டுத் தொடர்பு முதலிய அத்தனைத் துறைகளிலும் இந்துமதக் கோட்பாடுகளே கடைப்பிடிக்கப் பெற்றுவருகின்றன. இந்து மதம் என்பது முற்றும் பார்ப்பன மதமே ஆகையால், பார்ப்பனரின் வேத, புராண, இதிகாசங்களில் கூறப்பட்ட கொள்கைகளே இன்றைய அரசியலாகவும், மற்ற மக்கள்துறை ஈடுபாட்டுக் கொள்கைகளாகவும் காட்டப்பெற்று வருகின்றன. இவ்வாறு திட்டமிட்டுப் பிற இனத்தைச் சாய்க்கும் பிராமணரின் நச்சுத்தன்மை நீங்கினால் ஒழிய, இவ்விந்திய நாட்டு அரசியல் சமவுடைமை அரசியல் என்றோ குடியரசுத் தன்மை வாய்ந்தது என்றோ கூறிவிட முடியாது. இன நிலையில் ஆரியத்தையும், மொழி நிலையில் இந்தி, சமசுக்கிருதத்தையும், அரசு நிலையில் வடவர் தலைமையையும் நிலைப்படுத்துவதே என்றென்றும் நடுவணரசுக் கொள்கையாக இருந்து வருகிறது.

'இந்தியப் பண்பாடு என்பதே வேதகால ஆரியப் பண்பாடு தான்' என்று அப்பட்டமாக எழுதப்பெற்றும் பேசப்பெற்றும் வருகிறது. முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. இராதாகிருட்டிணன் தம் முன்னாளைய இங்கிலாந்துப் பேச்சு ஒன்றில் (Upton Lectures) "ஆரியர்களுடைய வேதகால அமைப்பே, புராண இதிகாசங்களால் வளர்ந்து, பின்னர் திராவிட மக்களுடன் கொண்ட தொடர்பின் விளைவாக இந்தியப் பண்பாடாக வளர்ச்சி பெற்றது' என்பதை உறுதிப் படுத்திப் பேசியுள்ளார். ஆரியப் பண்பாடே, இங்குள்ள நாகரிகம், மதம், கலை, அரசியல் என்றால், அவர்கள்-தாமே இங்குள்ள தலைமைப் பதவிகளுக்கும், அதிகாரங்களுக்கும் உரிமையுடையவர்கள் என்பதாகப் பொருள்படும்? பின் எங்ஙன் இது குடியரசு என்றோ, சமவுடைமை அரசு என்றோ ஆகும்? இக்கூற்றின் உண்மைப் பொருளை நன்கு எண்ணிப்பார்க்கவேண்டும்.

எனவேதான், இங்குள்ள அனைத்துத் துறைகளையும் ஆரியப்பார்ப்பனியம் கைப்பற்றிக் கொண்டு, அவரல்லாத பிறரை ஆளுமைப்படுத்தியும் அடிமைப்படுத்தியும் ஆண்டு கொண்டுள்ளது. இவ்வகையில் பிராமணர்கள் அனைவரும் ஒருவர்க்கொருவர் ஒத்துழைப்பவர்களாகவும் ஒருங்கிணைந்தவர்களாகவும் ஈடுபட்டுவருவதைத் தமிழர்கள் நன்கு உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். இங்குள்ள தினமணி, இந்து போலும் பச்சைப் பார்ப்பன இதழ்களில், வேத, புராண முயற்சிகளுக்கும் செய்திகளுக்கும் பெரிய எழுத்துகளிட்டு முதலிடந்தந்து

விளம்பரங்கள் செய்யப் படுகின்றன. வேத, புராணங்கள் பரவப் பரவத்தான் பிராமணியத்திற்கு எழுச்சியும் காப்பும் ஏற்படும் என்பது இவர்களின் கோட்பாடு. அறிவியல் தொடர்புடைய நிகழ்ச்சிகளுக்குக்கூட, வேத, புராணத் தொடர்புகளைக் காட்டிப் பொது மக்களை ஏமாற்றுவதில் இவர்கள் மிகவும் கெட்டிக்காரர்கள். நிலா மறைப்பு (சந்திர கிரகணம்) எப்படி ஏற்படுகிறது என்பது அறிவியல் படித்த அனைவருக்கும் தெரியும்! அந்நாளில் கங்கையில் மக்கள் புனித நீராடினர் என்பதை ஒரு செய்தியாகப் பரப்பினால் தான், இவர்களின் வேத, புராணக் கொள்கைகளுக்கு வலிவு ஏற்படும் என்பது இவர்களின் எண்ணம்! எனவே அச்செய்தி அனைத்துப் பார்ப்பன இதழ்களிலும் தவறாமல் போடப் பெறுகிறது! காஞ்சி காம கோடியாரின் இந்துமத, வேத, புராணப் பரப்புதல் முயற்சிகளுக்கு இவர்கள் கொடுக்கும் விளம்பரங்களைப் பார்த்தாலே, மக்களைத் திட்டமிட்டுத் தம் மதக் கோட்பாடுகளுக்கு இரையாக்கும் முயற்சி நன்கு புலப்படும். சமசுக்கிருத மொழி வளர்ச்சியில் இவர்களுக்குள்ள அக்கறை, தமிழ் வளர்ச்சியில் நம் தமிழர்களுக்கு இருக்குமானால் நம் இனம் இவ்வளவில் அடிமைப் பட்டிருக்காது. இவர்கள் இதழ்களில் தமிழர் இன நலக்கட்சிகளுக்கோ, மொழிவளர்ச்சிச் செய்திகளுக்கோ சிறிதும் விளம்பரம் தருவதில்லை. ஆனால் தமிழர் இதழ்களிலோ, வேத. புராண முயற்சிகளுக்குப் போட்டி போட்டுக் கொண்டு விளம்பரங்கள் தரப்பெறுகின்றன! இது மட்டுமா? அவர்களின் பாலியல் குப்பைத் தொட்டிகளாக விளங்கும் கவர்ச்சியேடுகளின் முதலாளிகளே தமிழர்கள் தாம்! அதிலும் தமிழ், தமிழின முன்னேற்றத்திற்கு உழைப்பதாகச் சொல்லிக் கொள்ளும் தமிழினத் தலைவர்கள் தாம் என்பதை மிக வருத்தத்துடன் கூறிக்கொள்ள வேண்டியிருக்கிறது! தமிழனின் தாராள மனப்பான்மை என்னும் இளித்தவாய்த் தன்மைக்கும், காட்டிக் கொடுக்கும் இரண்டகச் செயலுக்கும், குட்டக் குட்டக் குனிந்து கொடுக்கும் இழிந்த அடிமைத் தனத்திற்கும் வேறு என்ன சான்றுகள் வேண்டும்?

இன்னொன்றை இங்கெடுத்துக் காட்டுவது மிக மிக இன்றியமையாதது. இக்கால் பிராமணர் நடத்தும் இதழ்கள் சிலவற்றில், பச்சையாகவும் கொச்சையாகவும் தாறுமாறான பாலியல் வெறிவுணர்வு நிரம்பிய கதைகளும் கட்டுரைகளும் வண்ணப் படங்களுடன் வெளியிடப் பெற்று வருகின்றன, இவை தமிழ்ப் படிக்கும் மக்களிடையில் மொழித் தாழ்ச்சியையும் மனத்தளர்ச்சியையும், அறிவு வீழ்ச்சியையும் ஏற்படுத்தும் என்பது உறுதி. இந்நிலைகளுக்கிடையில் சமசுக்கிருதம் உயர்வானது; வேதமதமாகிய இந்து மதக் கொள்கைகள் உயர்ந்தன என்னும் எண்ணம்

வளரும்படி ஒருவகைக் கருத்து கரவாகவும் சூழ்ச்சியாகவும் பரப்பப்பட்டு வருகிறது. தமிழர்கள் இந்நிலையை மிகவும் எச்சரிக்கையாக எண்ணி உணர்ந்து கொள்வதுடன், அவ்விதழ்களை அறவே புறக்கணிக்கவும் வேண்டும் என்று அறிந்துகொள்க.

இனி, தமிழ் மொழியின் இயக்கையமைப்பையும் அதன் அறிவியல் கூறுபாடுகளையும் அறியாதவர்களே, அம்மொழியைவிட, சமசுக்கிருதத்தை உயர்வாகவும் தெய்வத்தன்மை வாய்ந்ததாகவும் கருதுவர். உண்மையில் சமசுக்கிருதத்தின் மொழியியல் அமைப்பையும், அதன் கலவைத் தன்மையையும் அறிந்த எவரும், அதனை உயர்தனிச் செம்மொழியாகிய தமிழினும் உயர்வாகக் கருத மாட்டார்கள். இந்நிலையில்தான் சமசுக்கிருத மொழியைப் பற்றி இக்கால் அரசியல் அதிகாரத்தில் உள்ள அமைச்சர்களும், தலைவர்களும்கூட வானளாவ உயர்த்திப் பேசி வருகின்றனர். இதற்குப் பிராமணர்களின் பொய்யுரைகளும் புனைவுரைகளுமே கரணியமாக இருக்க முடியுமேயன்றி, வேறு அடிப்படைகள் எதுவும் இருக்க முடியாது; அம்மொழி தேவமொழியென்னும் குருட்டுக் கொள்கையும் அறியாமை எண்ணமும் இங்குள்ள மாநில ஆளுநர், நடுவண் அமைச்சர்கள் உட்பட அனைவர்க்கும் இருப்பதைப் பார்த்தால், ஒன்றால், இவர்களுக்கு அம்மொழி பற்றிய வரலாறு எதுவும் தெரியாது என்றே எண்ணி, இரங்க வேண்டியுள்ளது; அன்றால் இவர்கள் வேண்டுமென்றே பார்ப்பனீய இனச் சார்பினராக மாறி, அவர்களின் தலைமைக்கும் தில்லு மல்லுகளுக்கும் தங்களை ஒப்புக் கொடுத்துக் கொண்ட அடிமைகளோ என்று கருதவேண்டியுள்ளது. இல்லெனில் இவர்கள் இச் சமசுக்கிருதத்தை ஏதோ 'தெய்வங்கள்' பேசுகிற மொழியென்று மயங்கி, அதன் வளர்ச்சிக்குத் தங்களை அடகு வைத்துக் கொள்ள மாட்டார்கள்.

இக்கால் சமசுக்கிருத வளர்ச்சிக்கென 6-ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 2 கோடியே 63 இலக்க உருபாவை அரசு ஒதுக்கியுள்ளது. அம் மொழியின் ஆராய்ச்சி வளர்ச்சிக்கும், கற்பிக்கும் முயற்சிக்கும், அஞ்சல் வழிக் கல்வி, அமைப்புக் கல்வி போன்ற ஏற்பாட்டிற்கும், அம்மொழியை வலுப்படுத்துவதற்கும் அத்தொகை செலவிடப்பட வேண்டும் என்பது அதன் திட்டமாகும். ஏற்கனவே உள்ள 'தேசிய சமசுக்கிருத' அமைப்பு நிறுவனத்தின் வழிப்புதுதில்லி, திருப்பதி, சம்மு, பூரி, அலகாபாது ஆகிய இடங்களில் நடைபெற்றுவரும் சமசுக்கிருதக் கல்வி நிலையங்களில் அம்மொழி பயிலும் மாணவர் ஒவ்வொருவருக்கும் மாதம் 100 உருபா முதல் 250 உருபா வரை உதவிச்

சம்பளங்கள் அளிக்கப் பெற்று வருகின்றன. இவ்வமைப்புக்குத் தலைவராக உள்ளவர் நடுவணரசுக் கல்வி, கலை, பண்பாட்டுக் குழுக கலை அமைச்சரான பர். பி. சி. சந்தர் என்பவர். மக்களின் வரிப் பணத்தில் வாழ்ந்து வரும் இவர், 'சமசுக்கிருத மொழியை எல்லா வகையானும் வளர்ச்சியுறச் செய்யும்படி அவ்வக்கால் அறிக்கைகள் விட்டு வருவது, மற்ற தேசிய மொழியாளர்க்கு எவ்வாறு நடுநிலைமை தாங்குவதாகும் என்பதை அனைவரும் எண்ணிப்பார்க்க வேண்டும்,

இந்தியாவில் உள்ள 86 பல்கலைக் கழகங்களில், சமசுக்கிருதத்தை ஏறத்தாழ 70 பல்கலைக் கழகங்களிலும் இந்தியை ஏறத்தாழ 65 பல்கலைக் கழகங்களிலும் கற்றுக்கொள்ள வாய்ப்பிருக்கும் பொழுது, தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய தென் திராவிட மொழிகளைக் கற்றுக் கொள்வதற்கு ஏன் பத்துக்கும் குறைந்த அல்லது ஒன்றிரண்டு கூடிய எண்ணிக்கையுள்ள பல்கலைக் கழகங்களில் மட்டும் வாய்ப்பேற்படுத்திக் கொடுக்கவேண்டும்? திரவிடர்கள் நடுவணரசுத் தலைமையைக் கைப்பற்ற முடியாமல் இருக்கும் சூழ்ச்சி மிகுந்த அரசியல் அமைப்பை வைத்துக்கொண்டு பிராமணியம் அரசாளும் உண்மையை இது தெரிவிக்கவில்லையா?

இன்னும் இந்திய மக்கள் தொகையில் நூற்றுக்கு மூன்று பேராக உள்ள ஆரியப் பார்ப்பனரின் மொழியாகிய சமசுக்கிருதத்தைப் பேசுபவரின் மொத்த தொகையே அரசு மக்கள் தொகை மதிப்பீட்டுக் கணக்கின்படி 500 பேர்களாக இருக்க, பிற தேசிய மொழிகளுக்குள்ள உரிமையைப்போல் அச் சமசுக்கிருத மொழியில், வானொலியில் செய்தி அறிக்கைகள் படிப்பதும், நாடகங்கள் நடிப்பதும், பாடல்கள் பாடுவதும், தொலைக் காட்சியில் நிகழ்ச்சிகள், கதைப் பொழிவுகள், உரையாடல்கள் நிகழ்த்துவதும் எப்படிப் பிராமணிய வளர்ச்சிக்குத் துணைபோகாத—அல்லது அவ்வினக் காவலுக்கு உதவாத செயல்களாகும்? இது பச்சைப் பார்ப்பனீயக் கொடுமைகள் அல்லவா? பெரும்பான்மை மொழியினர் நலத்தை நசுக்கி ஒரு சிறு பான்மையின ரின்வளர்ச்சிக்குத் துணை போகின்ற அரசின் இரண்டகச் செயல் அல்லாமல் இதை வேறு என்னவென்று சொல்லமுடியும்? மிகச் சிறுபான்மையுள்ள பார்ப்பனரிலும் சமசுக்கிருதம் நன்கு படித்த ஒரு சிலருக்குத்தானே இந்நிகழ்ச்சிகள் புரியும்! ஓர் இரண்டு நூறு பேர்களுக்காக, கோடிக்கணக்கான மற்ற மக்களின் உரிமை பறிக்கப்பட வேண்டுமா? இஃது என்ன நேர்மை? என்ன நடுநிலைமை?

இந்த நிலையில் "பள்ளிகளில் சமசுகிருதத்தைக் கட்டாயப் பாடமாக்க வேண்டும்" என்று வேறு, கடந்த சனவரியில் சென்னையில் கூடிய சமசுக்கிருத சம்மேளனம் அரசுக்கு வேண்டு

கோள் விடுத்துள்ளது. அதற்கு அச் 'சம்மேளனம்' கூறும் கரணியங்கள்தாம் எத்துணைப் பொய்யும், புளுகும், குறும்புத்தனமும் பிறமொழியாளரை அவமதிக்கும் தன்மையும் வாய்ந்தனவாக உள்ளன! அம்மாநாட்டில் கூறிய கருத்துரைகளையும் தீர்மானங்களையும், தமிழ்ப் பற்றுளர்களும் தமிழ்த் தலைவர்களும், கண்ணுற வேண்டும் என்பதற்காக, அச்செய்தி அப்படியே திருத்தமின்றிக் கீழே கொடுக்கப் பெறுகிறது:— (தினமணி-சென்னை-சனவரி-2)

"ஹிந்தி பிரசார சபையைப் போல ஸம்ஸ்கிருத பிரசாரசபை ஒன்று பல்கலைக் கழக அந்தஸ்தில் அமைந்தால் தான் தமிழ் நாட்டில் சம்ஸ்கிருதம் பரவ முடியும்.... அதற்கு மத்திய சர்க்கார் ஆவன செய்ய வேண்டும்...... சம்ஸ்கிருதம் படித்த மாணவர்கள் மற்ற மாணவர்களைவிட கெட்டிக்காரர்களாகவும் படிப்பில் சிறந்தவர்களாகவும் விளங்குவது நிரூபிக்கப்பட்டுள்ளது. சமஸ்கிருதம் ஜெர்மனி, அமெரிக்கா போன்ற நாடுகளில் எல்லாம் எல்லோராலும் கற்றுக்கொள்ளப்படுகிறது. நம் நாட்டில் ஒவ்வொருவரும் சம்ஸ்கிருதம் கற்றுக் கொள்வது மிக அவசியம்.

...விஞ்ஞான யுகமான இக்காலத்தில் கூட, ஸம்ஸ்கிருத நூல்கள் கணிதம், வான சாஸ்திரம், ஜியாமெண்டரி, டிரிகனுமெண்ட்ரி, அல்ஜிபரா, பூகர்ப ஆராய்ச்சி, அணு ஆராய்ச்சி, கட்டிட நிர்மானம் ஆகியவற்றிற்கு பெரும் உதவியாக உள்ளன ....

...எல்லா மாநில சர்க்கார்களும் உடனடியாக ஸமஸ்கிருதத்தைக் கட்டாய பாடமாகச் சொல்லித்தர வேண்டும். அப்போதுதான் மாணவர்களுச்கு நமது புராதன கலாச்சாரமானது புரியவரும்.

... ஒவ்வொரு மாநிலத்துக்கும் ஒவ்வொரு சம்ஸ்கிருத நிறுவனம் ஏற்படுத்தி, மத்திய நிறுவனம், அவற்றின்மூலம் ஸம்ஸ்கிருதம் நாடு முழுவதும் பரவவும், மேல் படிப்புகளும் ஆராய்ச்சிகளும நடத்தவும் முழு ஆதரவு தரவேண்டும் என்று மத்திய சர்க்காரை இந்தச் சம்மேளனம் கேட்டுக் கொள்கிறது.

— தற்சமயமுள்ள ஹிந்து அறநிலைய அமைப்பு கலைக்கப்பட்டு, சிறந்த முறையில் ஹிந்து கோயில்களை நிர்வகிக்க முழு அதிகாரமும் உள்ள அற நிலையங்கள் ஸ்தாபனம் நிறுவப்பட வேண்டும்.

...மாணவர்களுக்கு ஒவ்வொரு நாளும் பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும சமயக்கல்வி சொல்லிக்கொடுக்க வேண்டும் என்று கல்வி அதிகாரிகளையும் சென்னை சர்க்காரையும் இந்த சம்மேளனம் கேட்டுக் கொள்கிறது".

—எப்படி? நடுவணரசைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானங்கள் அல்ல இவை! நாளை நடைபெறவிருக்கும் திட்டங்கள்! இவை மட்டுமா? இன்னும் எத்தனை? எத்தனை? (தொடரும்)

# செய்திகள்

## 1. காரைக்குடி, அழகப்பர் பொறியியற் கல்லூரி—முத்தமிழ் விழா :

கடந்த 21-2-78 செவ்வாய் காலை 10 மணியளவில், காரைக்குடி, அழகப்பர் பொறியியற் கல்லூரி-முத்தமிழ் விழாவின் தொடக்க விழா, பேரா. திரு. இராம. இராமநாதன், க.மு., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. விழாவில் தென்மொழி மறை. நித்தலின்பனுர் அவர்களின் நல்லுரைக்குப்பின், ஆசிரியர் பாவலரேறு. பெருஞ்சித்திரனுர் அவர்கள, 'உயர்தனிச் செம்மொழி' என்ற தலைப்பில பேருரையாற்றி முத்தமிழ் விழாவைத் தொடங்கிவைத்தார். செயலாளர் கரு. கண்ணன் நன்றியுரைக்குப் பின் தொடக்க விழா வின் காலை நிகழச்சி இனிதே முடிவுற்றது. நிகழ்ச்சிக்குப் பின்னர், ஆசிரியரவர்கள் மறை. நித்தலின்பனுருடன் குன்றக்குடி சென்று, தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்களின் விருப்பப்படி, அவர்களுடன் ஒரு மணி நேரம் இன்றுள்ள நாட்டு நடப்பின் சில பொதுவான செய்திகள் குறித்துக் கலந்து பேசியிருந்தனர். அக்காலை அடிகளார் அவர்கள் ஆசிரியர் பெருஞ்சித்திரனுர் அவர்களிடம் நூல்கள் வெளியீட்டிற்கென உரு. ஐநூற்று ஒன்றை அன்பளிப்பாகக் கொடுத்தார்கள். அவர்களின் அன்புதவிக்கு நன்றிகூறி ஆசிரியரவர்கள் அங்கிருந்து விடைபெற்ருர்கள்.

## ௨. அண்ணுமலைப் பல்கலைக் கழகம்—தனித்தமிழ் இயக்கத் தொடக்கப் பெருவிழா :

சென்ற கும்பம் 10 அறிவன் (22-2-78) அன்று மாலை 5 மணியளவில், அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில், ஏறத்தாழ ஆயிரம் மாணவ மாணவியர்களை உறுப்பினர்களாகக் கொண்ட, தனித்தமிழ் இயக்கத்தின் தொடக்கப் பெருவிழா, பட்டமளிப்பு விழா அரங்கமாகிய சாத்திரி அரங்கத்தில் சிறப்புற நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு முது புலவர் க. வெள்ளைவாரணனுர் அவர்கள் தலைமை தாங்கினுர். இயக்கச் செயலர் செ. திருத்தொகையன் (தனசேகரன்) அவர்களின் வரவேற்புரைக்குப்பின், தலைவர் அவர்கள் அரியதொரு முன்னுரையாற்றினுர். அதன் பின் தென்மொழி மறை. நித்தலின்பனுர் அவர்கள் தனித்தமிழ் இயக்கத்தை வரவேற்று அதன் இன்றியமையாமை பற்றி உரையாற்றினுர். பின்னர் பாவலரேறு பெருஞ்சித்திரனுர் அவர்கள் இயக்கத்தை தொடங்கி வைக்குமுகத்தான் 'தமிழ்மொழி நலனே தமிழின நலமாகும்' என்னுந் தலைப்பில் உணர்வு நிரம்பிய நீண்டதொரு

சிறப்புரையாற்றினர். திரளாகக் கூடியிருந்த மாணவர்களும் மாணவியர்களும் இறுதிவரை அமைந்திருந்து, இயக்கத்தைப் பெரிதும் வரவேற்றனர். தலைவர் அவர்களின் முடிவுரைக்குப்பின் 10 மணியளவில் விழா சிறப்புற நிறைவுற்றது. இவ்விழாவிற்கு நெய்வேலி உ.த.க. அன்பர்கள் சிலரும், புதுவைத் தென்மொழி அன்பர்கள் சிலரும் வந்திருந்ததும், மறுநாள் காலை ஆசிரியரவர்கள் அங்கிருந்து புறப்படுமுன், பல்கலைக் கழகத்தைச் சார்ந்த ஆய்வுக்கூடப் பணியாளரும் மிக முதியவருமான ஒருவர் ஆசிரியரவர்களை வந்து கண்டு வணங்கி, "நேற்றைய சொற்பொழிவால் எங்கள் பல்கலைக் கழகத்தில் உள்ள அழுக்குகளையெல்லாம் போக்கிவிட்டீர்கள், ஐயா, நீங்கள் நெடிது வாழ வேண்டும்" என்று நாத்தழுதழுக்கவும் கண்களில் நீர் சுரக்கவும், வாழ்த்தியதும் "தங்கள் வரவு இங்கு அடிக்கடி இருக்க வேண்டும்" என்று வேண்டி விடைபெற்றதும் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளாகும்.

## 3. தேசுமுகிப்பேட்டை, மறைமலையடிகள் மன்ற ஆண்டு விழா - திருக்கழுக்குன்றம் ;

நடந்த கும்பம் 14 (26-2-78) ஆம் பக்கல், திருக்கழுக்குன்றம் மலையடிவார மண்டபத்தில், மாலை 6-30 மணியளவில் தேசுமுகிப் பேட்டை மறைமலையடிகள் மன்ற ஆண்டு விழாவும், திருவள்ளுவர் விழாவும் ஒன்றுசேர நடந்தன. நிகழச்சிக்குத் திருவாளர்கள். கோ. முத்துப் பெருமாள், க.இ., அறி.இ., ஆ.ப; (தலைவர், மறைமலையடிகள் மன்றப்) அவர்கள் தலைமை தாங்கினர். புலவர். பூசை. அ. நமசிவாயர்; முத்தமிழ்ச் செம்மல் மா. சு. மணி, மு. வே. கெங்காதரன், க.மு., புலவர். வீ கு. நடராசன், தென்மொழி மறை. நித்தலின்பனர், புலவர். இறைக்குருவனர் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். புலவர். தி. நா. அறிவுஒளி அவர்கள் புலவர். இறைக்குருவனர் அவர்களின் 'வயிர மூக்குத்தி' என்னும் நாடகப்பாவிய நூலை வெளியிட்டுப் பேசினர். இறுதியில் பாவலரேறு. பெருஞ்சித்திரனர் அவர்கள் அரியதொரு சிறப்புரையாற்றினர். இரவு 11 மணியளவில், நெய்வேலி செந்தமிழ் இசைக்குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது. கூட்டம் 12 மணியளவில் இனிது முடிந்தது. இறுதியில் இசைக் குழுவினரின் மெல்லிசை நிகழ்ச்சியைப் பாராட்டிப் பாவலரேறு. பெருஞ்சித்திரனர் உரு. 25-உம், புலவர் தி. நா. அறிவுஒளி உரு. 10-உம், தென்மொழி மறை. நித்தலின்பனர் உரு. 10-உம் இசைக்குழுவினர்க்கு அன்பளிப்பாக வழங்கினர்.

## 4. கொட்டமிட்டா, அரசயர்பள்ளி, இலக்கிய மன்ற ஆண்டு விழா :

சென்ற, கும்பப் 15 (27-2-78) ஆம் பக்கல், மாலை 5 மணியளவில் கொட்டமிட்டா (வ ஆ.) அரசுயர் பள்ளியின் இலக்கிய மன்ற

ஆண்டு விழா, அவ்வூர் முன்னாள் ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு. அ. வெங்கடாத்திரி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. புலவர் திரு. மு. ஆறுமுகம், க.இ., தமிழாசிரியர் வரவேற்புரைக்குப்பின், தலைமை ஆசிரியர் திரு. கீ. வி. நாகராசன், க.இ., ஆ.ப. ஆண்டறிக்கை படித்தார். தென்மொழி மறை. நித்தலின்பனார் அவர்களின் சிறப்புரைக்குப் பின், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் 'திருவள்ளுவரும் மாணவரும்' என்னும் தலைப்பில் பேருரையாற்றினர். நிகழ்ச்சியின் இறுதியில் பரிசு வழங்கலும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. தமிழாசிரியை புலவர் திருவாட்டி இரா. செகதாம்பாள் அவர்களின் நன்றியுரைக்குப் பின் நிகழ்ச்சிகள் இனிதே முடிவுற்றன. கொட்டமிட்டா உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் தூய தமிழில் ஆர்வமிக்கவராகவும் பண்புமிக்கவராகவும் மலர்ந்திருக்கின்ற பெருமை அந்தத் தமிழாசிரியராகப் பணியாற்றும் தமிழாசிரியர் புலவர் திரு மு. ஆறுமுகம்,க,இ. அவர்களையும், தலைமையாசிரியர் திரு. கீ. வி. நாகராசன். க.இ;, ஆ.ப., அவர்களையுமே சாரும் என்பது மகிழ்ச்சியுடன் குறிப்பிடத்தக்கது. தமிழ்ச்சிட்டைப் பெரும் அளவில் வாங்கிப் படித்துப் பயன்பெறும் மாணவர்கள் இப்பள்ளி மாணவர்களே என்பதும் பெருமையுடன் குறிப்பிடத் தக்கதாகும்.

## ரு. சென்னை, கிண்டி பொறியற் கல்லூரியின் தமிழ் மன்ற ஆண்டு நிறைவு விழா :

சென்னை, கிண்டி பொறியியற் கல்லூரியின் தமிழ்மன்ற ஆண்டு நிறைவு விழா, கடந்த 2—3—78 அன்று மாலை 5-30 மணியளவில் அக்கல்லூரி விவேகானந்தர் அரங்கத்தில் நடந்தது. அவ் விழாவிற்கு பர். பா. இளங்கோ தலைமை தாங்கிச் சிறப்புச் சொற்பொழிவாளரான பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் தமிழ்த்தொண்டைப் பலவாறு பாராட்டி உரைத்தார். திரு. சு. கிருட்டிணன் ஆண்டறிக்கை படித்தார். பின்னர் மன்ற உறுப்பினர்கள் விடைபெறும் முறையால் உரையாற்றினர். அடுத்து, தென்மொழி மறை. நித்தலின்பனார் தனித்தமிழ் இபக்க முயற்சிகள் குறித்துக் கருத்துரையாற்றினா. இறுதியாகப பாவலரேறு பெருஞ்சித்திரனார் தமிழ்மொழியின சிறப்பியல்கள் குறித்துச் சிறப்புரையாற்றினர். அதன்பின் பரிசு வழங்கலும், துணைத் தலைவர் ப. அர. நக்கீரன் அவர்களின் நன்றியுரையும் நிகழ்ந்து விழா இனிது முடிவுற்றது.

## 6. புதுச்சேரி, தனித்தமிழ்க் கழகத் தொடக்க விழா:

சென்ற கும்பம் 21-ஆம் பக்கலில் (5—3—78) மாலை 6-30 மணியளவில், புதுவையில் தனித்தமிழ்க் கழகத் தொடக்க விழாவும் மொழிஞாயிறு பாவாணர் பிறந்தநாள் விழாவும் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றன. கூட்டத்திற்குப் புதுச்சேரித் தனித்தமிழ்க்

கழகத் தலைவர் திரு. தமிழநேயன் தலைமை தாங்கினார். செயலர் தென்மொழி க. தமிழமல்லன் வரவேற்புரை நிகழ்த்தினார். கூட்டத்தில் புலவர் திரு. திருமுருகன், க.மு., கல்.இ, புலவர் திரு. அரிமதி தென்னகன், பேராசிரியர் திரு. அ. பசுபதி, க.மு. புலவர் தி. நா. அறிவுஒளி, தென்மொழி மறை. நித்தலின்பனார் ஆகியோர் உரையாற்றினர். பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார். திரு. சிவ சண்முகம் அவர்கள் பாவேந்தர், பாவாணர், பாவலரேறு ஆகியோரின் பாடல்களைப் பாடினார். திரு சி. தமிழ்மாறன், க.இ., பேச்சாளராக அறிமுகப் படுத்தப்பெற்றார். இறுதியில் திரு. அரங்கசாமி நன்றியுரை கூறினார். விழா இரவு 11-45 வரை நடைபெற்றது. பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் அரிய, நீண்ட உரையினை அவையினர் மிக ஆர்வமாய் இருந்து கேட்டது குறிப்பிடத்தக்கது. ஓர் இலக்கியக் கூட்டம் இரவு 11-45 வரை இவ்வளவு சிறப்பாக நடைபெற்றது புதுச்சேரியில் இதுவே முதல் முறை. கூட்டத் தொடக்கத்தில் ஆசிரியர்க்கு மாலைக்குப் பகரமாக முத்திரையர் பாளையம், தமிழ்ஒளி மன்ற ஆசிரியர் திரு. ஒளிவென்றி உரு. 5-உம் சேலியமேடு ஆசிரியர் திரு. சீவானந்தம் உரு, 5-உம் அன்பளிப்பாகக் கொடுத்தனர்.

# பிற பொதுச் செய்திகள்!

## 1. தென்மொழி மறவன் ஏந்தல் இரும்பொறை வாழ்க!

*தென்மொழி புரக்குநரும், கோவை சேரர் கொற்ற அமைப்பாளரும், விடுதலை மறவருமாகிய திரு. தென்மொழி மறை. நித்தலின்பனார் அவர்களின் துணைவியார் திருவாட்டி. தென்னி. தேவகாந்தி, கடந்த சிலை 26 (12—1—78) வியாழனன்று, தம் இரண்டாம் மகவாகத் தென்மொழி மறவன் ஏந்தல் இரும்பொறையைப் பெற்றெடுத்தார். அதன் நினைவாகத் தென்மொழி வளர்ச்சிக்கென உருபா 50 அன்பளிப்பாக வழங்கப் பெற்றது. தென்மொழி மறவன் ஏந்தல் இரும்பொறை அடுத்த தலைமுறைத் தமிழ்த் தலைவனாக வளர்ந்து, மொழிக்கும் இனத்திற்கும் நாட்டிற்கும் அரிய தொண்டாற்றிப் பேறும் புகழும் பெறுக எனத் தென்மொழி பல்லாற்றானும் வாழ்த்துகிறது.*

## 2. சோசப் பிரான்சிசு-ஆரோக்கிய மேரி—வாழ்க!

*வெங்காலூர்த் தென்மொழி அன்பர் திரு. சோசப்பிரான்சிசு அவர்கள் கடந்த சுறவம் 14 (27—1—78)ஆம் பக்கல் மதுரையில் செல்வி. ஆரோக்கியமேரியைத் தம் வாழ்க்கைத் துணைவியாகக் கொண்டதன் நினைவாகத் தென்மொழி வளர்ச்சிக்கென உரு. 25 அன்பளிப்பாக வழங்கினார். செல்வி ஆரோக்கியமேரியுடன் திரு. சோசப்பிரான்சிசு இனிதே வாழ்ந்து இல்லறம் நடத்திப் பல்லாற்றானும் நல்வளம் பெருகிடத் தென்மொழி நிறைந்த நெஞ்சுடன் வாழ்த்துகிறது.*

## 3. இரா பழனிச்சாமி-சொ. கதிர்மதி (பானுமதி) வாழ்க!

கடந்த கும்பம் 7 (19—2—78) ஞாயிறு அன்று, சித்தோடு பாவலர். திரு. குமரநடவரச ஈவப்பனார் அவர்களின் குடும்ப நிகழ்ச்சியாகப் புளியம்பட்டி இரா. பழனிச்சாமி அ.,றி.இ., கல்,இ., அவர்களுக்கும், தகடூர் சிரூர் ஆங்கிலப் பள்ளி ஆசிரியை செல்வி. சொ. கதிர்மதி (பானுமதி)க்கும், கோவை, சேரர் கொற்ற அமைப் பாளர் தென்மொழி மறை. நித்தலின்பனார் தலைமையில் திருமணம் சிறப்புற நடந்தது அறிஞர் பலரும் வாழ்த்துரை வழங்கினர். திருமண நினைவாகத் தென்மொழி வளர்ச்சிக்கு அன்பளிப்பாக உரு. 15-உம், தென்மொழி தமிழ்ச்சிட்டுக்கு ஓராண்டுக் கட்டணமும் அளிக்கப்பெற்றது. மணமக்கள் எல்லா நலமும் வளமும் பெற்று இனிதே வாழத் தென்மொழி பல்லாற்றானும் வாழ்த்துகிறது.

## 4. கழகப் புலவர் விழா-காரைக்குடி.

கடந்த 19—2—78 காலை 9-30 மணியளவில் காரைக்குடி, தமிழ்ச் சங்கம், முதலாவது கழகப் புலவர் விழாவைக் கொண்டாடியது. காலை விழாவரங்கத்தைத் தவத்திரு. குன்றக்குடி அடிகளார், நாவலர் இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் தொடக்கி வைத்தனர். பகலில் பர். இரா. சாரங்கபாணி தலைமையில் பாவரங்கமும், மாலை கி. ஆ. பெ. விசுவநாதம் தலைமையில் பொழிவரங்கமும் சிறப்புற நடைபெற்றன. பர். வ. சுப. மாணிக்கம், பண்ணாராய்ச்சியறிஞர் ப. சுந்தரேசனார், பேரா. கோ. சிவகுருநாதன், பர். ஔவை நடராசன் ஆகியோர் விழாவிற் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

## 5. அன்னம்-தமிழ்நாவன் பெற்ற தமிழ்க்கதிர் வாழ்க!

நெடுநாளையத் தென்மொழிக் குடும்ப உறுப்பினரும், சென்னை அரசர் முத்தையா உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியரும் ஆகிய, புலவர் திரு. தமிழ்நாவன் அவர்களின் துணைவியர் திருவாட்டி. அன்னம் கடந்த 19—3—78 ஞாயிறன்று தம் இரண்டாம் மகவாகச் செல்வன் ஒருவனை ஈன்று புறந்தந்தார், அம்மகவுக்கு ஆசிரியர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தமிழ்க்கதிர் என்று பெயர் சூட்டியதன் நினைவாகத் தென்மொழி வளர்ச்சிக்கு உரு. 10, அன்பளிப்பாகத் தரப்பெற்றது. அன்னம்-தமிழ்நாவன் பெற்ற தமிழ்க்கதிர் அறிவுக் கதிராக ஒளிர்ந்து, தமிழக மேற்போர்த்த வல்லிருள் கடிந்து நல்லொளி பரப்பிச் சீரும் சிறப்புமுறத் தென்மொழி வாயார வாழ்த்துகிறது.

---

## நமக்கு வந்த மடல்கள்—எண் திருத்தம்.

சுவடி 14, ஓலை 10-இல் வெளிவந்த நமக்குவந்த மடல் எண் 566ஐ, 573ஆகக் கொள்க.

# நூல் நிறை

நூல் : "குமாரன் ஆசான்"
ஆசிரியர் : திரு. கு. வெ. கிருட்டிணசாமி, க.மு., ச.இ.,
வெளியீடு : பூங்குன்றன் பதிப்பகம்,
6, திருவேங்கடம் தெரு, வடகோவை, கோவை-641 002.
விலை : உருபா. 7-50. பக்கம் : 220.

மலையாளப் பாவலரும் சீர்திருத்துநரும், நாராயண குருவின் மாணுக்கருமான குமாரன் ஆசானின் வாழ்க்கை வரலாறும், அவர் வாழ்ந்த காலத்திற்கு முன்னர் மலையாள நாட்டிலிருந்த சாதி-சமய இழிநிலையும், மடமைப் போக்கும், அந்நிலையிலிருந்து மலையாளியரைத் திருத்தக் குமாரன் ஆசான் பாவாலும் பணியாலும் முயன்றமையும் தமக்கேயுரிய அழகிய நயமார்ந்த இனிய எளிய நடையில் ஆசிரியர் திரு. கு. வெ. கிருட்டிணசாமி, க.மு., ச.இ., அவர்கள் இந்நூலை யாத்துள்ளார்.

குமுகாயத் திறனாய்வும், மேற்கோள்களை முறைபறிந்து ஆளுந் திறனும், கலைபயில் திறமும், கட்டுரை வன்மையும், முற்போக்கெழுச்சியும், பொதுமைப் புரட்சியும் கரிக் கூத்திடும் இந்நூல் தமிழ்பெற்ற நன்னூல்! யாவரும் வாங்கிக் கற்றுப் பயன் நுகரத்தக்க கருத்து நூல்.

ஆயின், ஆசிரியர் தூயமொழி நடையினைக் கையாண்டிருப்பின், இந்நூலின் நலமும் நயமும் கலை வளமும் பன் மடங்கு உயர்ந் தோங்கியிருக்கும்.

ஆங்காங்கு எழுத்துப் பிழைகளும், சிற்சில சொற்பிழை, சந்திப் பிழைகளும் உள. அவற்றை ஆய்ந்து செப்பமாக வெளியிட்டிருக்கலாம்.

தமிழுக்குத் திறமான புதுமை எழுத்தாளர் வாய்த்துள்ளார். தமிழகமே, அவரை வரவேற்றுப் பயன் கொள்க!

—திண்டிவனத்தான்.


தடைசெய்யப்பட்ட தமிழ்ழோசையின் தொடர்ச்சி

# இயற்றமிழ்

[திறனாய்வுத் திங்களிதழ்]

சூடும் சுவையும் குறையா வகையில்
நாடும் மொழியும் நலம்பெற நடக்கும்
நல்ல தமிழேடு; திங்கள் வெளியீடு.

வெளியீடு : இயற்றமிழ்ப் பயிற்றகம், திருவாரூர்.
தனியிதழ் 50 காசு. ஆண்டுக் கட்டணம் உருபா 5.
வாழ்நாள் தொகை உருபா 100.

# பாவாணர் அறிக்கை.

## உ.த.க. உறுப்பினருக்கும் தமிழ்ப்பற்றுளருக்கும் அறிவிப்பு

உ.த.க. ௪-ஆம் மாநாடு வருகின்ற விடை ௨௭ காரி, ௨௮ ஞாயிறு (*10, 11—6—1978*) ஆகிய இரு நாளிலும் சென்னையிற் பெரியார் திடலில் சிறப்பாகத் தப்பாது நடைபெறும். நிகழ்ச்சி நிரல் வருகின்ற மேழத் (ஏப்பிரல்) தென்மொழியிதழில் வெளிவரும்.

மாநாட்டிற்குப் பணம் இதுவரை விடுக்காதவரும், ஏற்கெனவே விடுத்து மேற்கொண்டும் விடுக்க இயல்பவரும், நிகழ்ச்சிநிரல் வெளிவந்தபின் ஒரு கிழமைக்குள், உ.த.க. பொருளாளர் திரு. செந்தமிழ்க் கிழாருக்கே (தொல்காப்பியர் இல்லம், செங்காட்டுப்பட்டி, (வழி) துறையூர், திருச்சி மாவட்டம்), தாம் தண்டியதையோ, தம் கையினின்றோ, பணவிடையாகவோ, காசோலையாகவோ, வரைவோலையாகவோ அனுப்பிவிடல் வேண்டும். எக்கரணியத்தையிட்டும், வேறெவர்க்கும் அனுப்புதல் கூடாது.

மாநாடு இதுவரை நடந்தவற்றிலும் மிகச்சிறப்பாக நடத்தப்பட விருப்பதால், மாநாட்டின் மெய்ம்மாட்சிக்கு உறுப்பினர் கைந்நீட்சியே ஏதுவாகும் என்பதை அறிதல் வேண்டும்.

சென்னை-78
15·3·78

தலைவர்.

---

## சாலை-சாலினி தென்னகச் சுற்றுச் செலவு.

தில்லிப் பல்கலைக் கழகப் பேராசிரியர்களான பர். சாலை இளந்திரையன் அவர்களும், பர். சாலினி இளந்திரையன் அவர்களும் வருகிற கோடை விடுமுறையில் தென்னகச் சுற்றுச் செலவு ஒன்றை மேற்கொள்ளுகிறார்கள். தமிழகம், பாண்டிச்சேரி, கருநாடகம், கேரளம் ஆகிய மாநிலங்களை அளாவிய இச்சுற்றுச் செலவு ஏறத்தாழ ஒரு மாத காலம் நீடிக்கும் என்று தெரிகிறது. *1978* சூன் மாதம் 15ஆம் பக்கல் சென்னையிலிருந்து புறப்படுவார்கள். மேற்குறித்த மாநிலங்களின் பல இடங்களில், பல நிகழ்ச்சிகளில் பங்குகொண்டு சூலை 15-ஆம் பக்கல் சென்னை வந்து சேருவார்கள். சுற்றுச் செலவின்போது இவர்களைக்கொண்டு சொற்பொழிவு, கலந்துரையாடல், உரைவீச்சுப் பொழிவு, பாப் பொழிவு முதலான நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்ய விரும்புவோர் விரைவில் பின்கண்ட முறையில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

Dr. SAALI ILANTHIRAIAN
9-A/7. W. E. A. Karol Bagh New Delhi-5

# சென்ற மாத அரசுச் செய்திகள்!

0 சென்னையிலுள்ள திருவல்லிக்கேணியை இனி 'டிரிப்ளிகேன்' என அழைக்கக்கூடாது எனத் தமிழக அரசு கட்டளை பிறப்பித்துள்ளது.

0 நாடு முழுவதும் நடைபெறும் திருமணங்கள் அனைத்தும் கட்டாயமாகப் பதிவு செய்யப்பெற வேண்டும் என்பதைச் சட்டமாக்க நடுவணரசு எண்ணி முடிவு செய்திருக்கிறது.

0 கேரள அரசு ஒப்போலை உரிமையை 21 அகவையிலிருந்து 18 ஆகக் குறைக்க முடிவெடுத்திருக்கிறது.

0 தொழில் நுட்பத் துறையில் இந்தியா தன்நிறைவுகாண வேண்டும் என அரசியல் தலைவர்கள் பேசிவருவது பொருளற்றது என்றும், உலக அறிவியல் அறிவைப் பெற அக்கொள்கை ஒரு தடைக்கல்லாக அமையும் என்றும், இந்திய தேசிய பொருளியல் ஆய்வுக்குழுவின் இயக்குநர் பிரகாசு தாண்டன் கருத்தறிவித்துள்ளார்.

0 100 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கிவரும் சென்னை கீழ்ப்பாக்கம் மனநோய் மருத்துவ மனை, இனிமேல் 'மன நலப் பாதுகாப்பு நிலையம்' என்னும் பெயரால் அழைக்கப்பெறும்.

0 'காந்தியப் பொருளியல் கொள்கை' இக்கால மக்களின் நடைமுறைக்கு முற்றிலும் பொருத்தமற்றது என்று, தேசிய மாதிரி மதிப்பீட்டுத் தலைவரும் பொருளியல் பேராசிரியருமாகிய தண்டேகர் கூறியுள்ளார்.

0 'எந்த மக்களின் மீதும் அல்லது எந்த நாட்டின்மீதும், அவர்களின் விருப்பத்துக்கு மாறாக இந்தியைத் திணிக்கக்கூடாது' என்றும், புது உலகின் சாளரமாகவும் நாட்டை ஒற்றுமைப் படுத்திவைக்கும் ஒரு சிறந்த கருவியாகவும் ஆங்கில மொழி இருந்து வருகிறது என்றும், இந்த மொழியை அகற்றினுல் அந்நிலை நாட்டைத் துண்டாக்கிவிடும் என்றும், இந்தி வெறியர்களின் கட்டுப்பாட்டிற்கு இந்தி பேசாத மக்கள் ஒருபோதும் இடம் கொடுக்க மாட்டார்கள் என்றும், குடியரசுத் தலைவர் சஞ்சீவி (இரெட்டி) அவர்கள் எச்சரித்துள்ளார்.

0 சென்ற சனவரி மாதம் உத்திரப் பைதிரத்தின் முன்னுள் பர். சம்பூர்ணனந்தின் சிலையை நடுவணரசுப் பாதுகாப்பு அமைச்சர் சகசிவன்ராம் திறந்துவைக்க, அவர் தாழ்த்தப்பட்டவர் என்பதால் அச்சிலை தீட்டுப்பட்டுவிட்டது என்று கூறி, அச்சிலையின் மேல் சிலர் கங்கை நீரைத் தெளித்துத் தூய்மைப்படுத்தினர்களாம். இந்நிகழ்ச்சி இந்தியாவின் ஒரு பகுதி மக்களை அவமதிப்பதாக உள்ளதென, பாராளுமன்றத்தின் எல்லாத் தரப்பினையும் சேர்ந்த உறுப்பினர்கள் ஒருமித்த முறையில் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

0 ஏதிலிகளாக இறந்து போகிறவர் கண்களைப் பெயர்த்தெடுத்து, விழியற்றவர்களுக்குப் பொருத்துவதற்குக் சட்டம் வரும் என்று நடுவணரசு கருத்தறிவித்துள்ளது.

# உலகியல் நூறு.

—பெருஞ்சித்திரனர்—

[மொழிபெயர்ப்பு: த முத்துக்குமரன், க.இ.]

## 19. ஓர்பியல்

### I. மெய்யறிவு நிலை

அறிவு பகுத்தறிவு மெய்யறிவென் றுன்றே
செறிவின் இயங்கிச் சிறக்கும்—முறிவுறுதல்
என்றென்றும் இல்லை இறையே விரிவென்ப
ஒன்றொன்று ஆரும் உயிர்.

பொழிப்பு: பற்றுதலறிவும், பற்றியவற்றைப் பகுத்துணரும் அறிவும் பகுத்துணர்ந்தவற்றின் என்றுமுளதாந் தன்மை பற்றிய மெய்யறிவும் எனப் படிப்படியாய் அமைந்து, ஒன்று செறிய மற்றது இயங்கிச் சிறப்புறும் என்க. இத்தொடர்ச்சியில் இடை முறிவுறுதல் எந்தப் பிறவியினும் இல்லை. (எனவே பிறவிதொறும் அறிவு தொடரும் என்க.) இறைமையறிந்து பேரறிவின் பொருந்துதலே அத்தொடரின் விரிவு என்று சொல்வர். இப்படி நிலையறிவுணர்வை யெல்லாம் உயிர்க்கூறு ஒவ்வொன்றுகத் துய்த்து உணர்கின்றது. 91

## 19. INTROSPECTION

### 1. ON TRUTHFUL KNOWLEDGE.

Common, rational and supreme
Are what as knowledge true we deem.
Intense one works and never breaks;
Grows as almighty, lives are streaks. (91

Tendency to catch, feel what is caught analytically and then know by degrees that which is there for ever is True Knowledge. When one is intense, the other function becomes known. No break in this continuity is ever known in any birth. (And so intelligence follows every birth.) The development of this continuity is to know the Supreme Being and to be one with it. Lives pass through the graded stages of knowledge and enjoy.

## ௨. மன நிலை

மனமொன்று மாட்சிபல மாந்தலுயிர் ஒக்கும்
இனமொன்றல் ஆங்காங் கியல்பாம்—புனமொன்றிற்
புள்ளார்தல் ஒக்கும் புலம்பார்தல் அப்புலம்பின்
உள்ளார்தல் ஆன்ற ஒளி!

பொழிப்பு: மனவெளி ஒன்றுதான். அவ்வெளிக்கண் ஆங்காங்குப் பொருந்தியியங்கும் உயிர்க்கூறுகளின் தகுதி நிலைகளுக்கேற்ப, அவ்வவ்விடத்து விளங்கித் தோன்றும் தன்மைகள் பலவாகும். அம்மனவெளிக்கண் தங்கிய உணர்வுகளைக் கண்டு நுகரப்பெறுதல் அவ்வவ் வுயிர்க் கூறுகளின் உயர்வு சிறப்புகளைப் பொறுத்தது. அவ்வகையில் உயிர்கள் ஒரோவழித் தம்மொடு ஒத்து விளங்குகின்ற உயிர்களொடு பொருந்துதல் அவ்வவ் விடத்துக்கண் இயல்பாகும் தினைப்புனத்தின்கண் விளைந்துநின்ற கதிர்களை ஆர்கின்ற பறவைக் கூட்டத்தினை ஒக்கதாம். உயிர்கள் மனப்புனத்தின் மலிந்துநின்ற நினைவுகளைக் கூர்கின்ற தன்மை அவ் வுயிர்களின் உள்நின்று இயக்குகின்ற பேராற்றலாக விளங்குவது என்றும் ஆர்ந்து நின்ற பேரொளியாகிய இறைமையாகும். (92)

## 2. MENTAL STATE.

Mind's one, greatness many; grouping
Depends on cell to cell living.
They enjoy like birds in cornfield
Supreme aids internal to yield. (92)

The mind's space is one. According to the capacity of the living cells in various stages of development in growth, understanding will be very many. To seek out the sense feeling prevalent in the mental space, combine and enjoy will depend on the greatness or smallness of the respective cells. In this manner, grouping of lives of a like nature becomes natural. Birds of a feather flocking to enjoy corns spread out in a field is an instance in point. The motivating force of all these lives is the work of the all-pervading supreme light of the Omnipresent.

## 3. இயக்க நிலை

பொருளனைத்தும் ஒன்றாகும் ஆற்றலெலாம் ஒன்றும்
உருளிரண்டும் ஒன்றினே டொன்றும்—மருள் நிலைகள்
ஆன்ற வியக்கென்ப ஆதல் பொருளாமுள்
ஊன்றல் இறையென் றுணர்.

பொழிப்பு: வேறு வேறாகப் பிரிந்தியங்கினாலும் பொருட் கூறுகள் அனைத்தும் ஒன்றே! அஃதேபோல் வேறுவேறாகப் பிரிந்தி யங்கினாலும் ஆற்றலெனும் உயிர்க்கூறுகள் அனைத்தும் ஒன்றே! அவ்வாறு பொருளாகவும் ஆற்றலாகவும் இயங்குகின்ற இரு தன்மை யுடையனவே! அதன் பல்வேறு கலந்தியக்கும் மயக்க நிலைகளே அவற்றின் இயக்கமாகும். உருவம் பெற்றுப் புறத்துப் புலனாகி நிற்பது பொருளாகும். அதனை அளாவி நின்று உள் ஊன்றி இயக்குகின்ற உயிர்க்கூற்றையே இறைப் பொருள் என்று உணர்ந்து கொள்க. (93)

## 3. ON MOTION

Matter is one; power is one.
Through motion they unite into one.
It's confused state they call motion;
Living form's supreme to reckon. (93)

Though various may be moving bodies, their material parts are but one. Likewise, though found acting in different ways force or power is always one. These two natures found acting in many different ways as different objects and forces have the affinity to unite into one in the final stage. The confused stages of combination in various ways is what is called motion. In visible embodied stage, it is an object. Know that the living force which combines with the object internally and has a fixed hold to make the object move to be the omnipresent matter.

## 4. கூர்தல் நிலை

தானே புலம்பனும் தாமாகி ஒன்றலிறை
கூனே தலைப்பிரிவு கொள்விரிவே நீள்புடவி
ஊனே தனையறியும் ஒண்ணுகர்ச்சி உட்கூருந்
தானே தலையொன்றித் தாம்.

பொழிப்பு: தான் என்னும் ஒருமையுணர்வே உயிர்க்கூறுகப் பிரிந்து இயங்கும் தன்மையை உருவாக்கும். அவ்வாறு பிரிந்தியங்கும் உயிர்க்கூறுகள் பல்வேறு துய்ப்பின் முடிவில் தம்மை முற்றும் உணர்ந்து கொண்டு தாம் என்னும் நிலையில் ஒன்றிணைந்து நிற்கின்ற நிலையே இறை நிலையாகும். ஒன்றியங்கும் இறைக்கூறினின்று இணைமுறிவுக் கடிக்களனுகிய உட்கோட்டத்தாலேயே முதற்கண் உயிர்கள் பிரிந்தியங்கலாகிய தன்மை நேரும். அவ்வாறு உயிர்க்கூறுகள் பிரிதலுற்றுத் தாம் இயங்குகின்ற நிலையின் விரிவே நீண்டு விளங்கும் புடவி என்க அவை பொருட்கூற்றுடன் சேர்ந்து தம்மைத் தனிப் படுத்திக் கொண்டு ஊனும் என்பும் குருதியுமாய் இயங்கி, அறிவு விளக்கமுறும்படி நுகர்ச்சி பெற்று, உள்ளுணர்வால் கூர்ந்து விளங்கி நின்று, பிரிதலுற்ற ஒன்றுடன் ஒன்று பொருந்தி இறுதி நிலையில் தாம் ஆகி நிற்கும்.

## 4. ON EVOLUTION

Omnipresent is self and soul
Link'd. Self expanded as a whole
Is universe. With matter gives
Flesh, bones, feelings for many lives. (94)

The feeling of 'self' gives to lives their separatist movement. Such separate life-parts after various experiences begin to fully understand, when 'I' becomes 'We' in the omnipresent stage. Disagreement with the Supreme with which it is united by a sort of internal dint is the first stage leading to life's separate existence. Expansion of the existence of such life-parts is what we call universe. Combining with material objects when these can stand apart, move in bodies as flesh, bone and blood, experience sense feeling so as to shine with mature wisdom, and have intense inner feeling to combine with that from which it parted, they stand by themselves in the fiinal stage.

## ரு: உறவுறழ்ச்சி நிலை

எவ்விடத்தும் எப்பொழுதும் எதுவும் தவறின்றே;
அவ்விடத்திற் கொவ்வா அலைவதுவே—ஒவ்விடத்தும்
ஒவ்வொன்றும் கொண்ட உறவும் உறழ்ச்சியுமே
அவ்வொன்றுக் கான அறிவு!

# தமிழ்ப்பண்பாட்டின் தனிச்சிறப்புகள்.

பன்மொழிப்புலவர்: இரா. மதிவாணன். க.மு.

தமிழினம் ஒரு காலத்தில் உலகத்துக்கு நாகரிகம் கற்றுக் கொடுத்த இனம். உலகத்தின் மிகத்தொன்மையான நாகரிகங்களும் மூல மொழிகளும் முறையே தமிழர்க்கும் தமிழுக்கும் பிள்ளைகளாய்ப் பிறந்து பல்கி வளர்ந்தவை.

வெள்ளை இனத்தவரே உலகில் அறிவும் திறனும் வாய்ந்தவர் என்றும் கருநிறத்தவரை அடிமைப் படுத்தியிருந்தவரென்றும் பெருமை கொள்கின்றனர். வெள்ளையினத்தவரின் வரலாறுதொடங்குவதற்கு முன்பே, உலகில் வெள்ளையினத்தவரைத் தம்மில்லத்தில் பணியாளராக வைத்திருந்த ஒரே கருப்பர் இனம், தமிழினம் என்பதை வரலாற்றில் மூடி மறைக்க விபலாது. கடைக்கழகக் காலத்திலும்கூட நண்ணிலக் கடலையடுத்த யவனர் தமிழக மன்னரின் அரண்மனை

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

பொழிப்பு: புடவிக்கண் எந்த உலகத்தும் எக்காலத்தும் நிகழ்கின்ற நிகழ்ச்சிகளில் எதுவும் முறைமையாக இயங்குதலன்றித் தன் நிலையின் மாறித் தவருக இயங்குதல் இல்லை. அவ்வாறு தவறிய இயக்கம் என்று கருதுவதெல்லாம், அவ்வவ் விடத்திற்குப் பொருந்தாத நெளிவுற்ற தன்மைகளே! பொருந்துகின்ற இடத்திலெல்லாம் ஒவ்வோர் உயிர்க்கூறும் பிறிதொன்றிடத்துக் கலந்து இயங்குகின்ற நிலையில், ஏற்படுகின்ற இணக்கமும், பிணக்கமும் அவ்வந் நிலைக்கண் ஈடுபட்டுத் துய்க்கின்ற உயிர்க் கூறுகளுக்கான அறிவுப் புலப்பாடுகளுக்கேயாம் என்று கொள்க. (95)

## 5. ON RELATIVE MOVE

Anywhere, e'er a thing ne'er errs,
Erratic where unsuited fares
Where one's relative move suits place
As that body's wisdom you trace. (95)

In any world in the universe, in any incident at any time, everything moves according to the law of its being and there is no mistake there. If there be any mishap. it is due to the unsuitability of things to the environs. In all places there is harmony, and in that stage where every life-part combines with another such, parting and meeting is for the outward display of its intelligence in that stage.

களில் பணியாளராக இருந்தனர். தி.பி. இரண்டாம் நூற்றுண்டின தான கிரேக்க நாடகம் ஒன்றில் தமிழக மேற்குக் கடற்கரைக் கோவிலில் டணிப்பெண்ணுக இருந்த கிரேககப் பெண்ணைப் பற்றிய குறிப்பு உள்ளது.

இன்றைய தமிழர், மொழியையும் தமக்கேயுரிய பண்பாட்டையும் பேணிக்காத்துவர மறந்ததால் உலகில் அண்மைக்காலம் வரை 33 நாடுகளில் சிறுபான்மையினராக இருந்தவர், இப்பொழுது ஒன்பதே நாடுகளில் சிறுபான்மையினராக அறிவிக்கப் பட்டுள்ளனர். மொழியும் பண்பாடும் இரு விழிகளாகப் போற்றப்பட்ட காலத்தில் உலகின் பல நாடுகளிலும் தமிழர்களின் வணிகக் குடியேற்றங்கள் இருந்தன. நண்ணிலக் கடற்பகுதியில் வாழ்ந்த தமிர்லெ—தமிலெ எனப்படும் தமிழர் கூட்டம் வணிகக் குடியேற்றமே யாகும். இஃதறி யாத வடபுலத்து வரலாற்றுசிரியர் பலரும் தமிழர் நண்ணிலக் கடற் பகுதியிலிருந்து தமிழகம் வந்தனர் என்று தலைகீமாசக் சுதைக் கின்றனர். பூம்புகாரிலிருந்த யவனக் குடியிருப்பின சன்று கொண்டு கிரேக்கர் தமிழ்நாட்டிலிருந்து தி.பி. இரண்டாம் நூற்றுணடில் கிரேக் கத்தில் குடியேறினர் எனின் ஒப்புவரோ எனச் சிந்திக்க. தமிழரின் வரலாற்றைத் தமிழ் செழித்திருந்த காலத்திலிருந்து தொடங்கினுல் தமிழ்ப்பண்பாட்டின் தனிச்சிறப்புகளை நன்கு அறியலாம்.

## வடவாரியர் தமிழ் நாகரிகம் தழுவினர்:—

ஆரிய, திரவிடப் போராட்டம் நிகழ்ந்ததெனவும் திரவிடர் தோற்றுத் தாசராயினர் எனவும் இன்றளவும கூசாது எழுது கின்றனர். ஆரிய-திரவிட இனக்கலப்பு மொழிக்கலப்பு நிகழ்ந்தது என்று கூறுவதையே இவர்கள் போராட்டம எனக் குறிக்கின்றனா. போராட்டததில் ஆரியர் வென்றிருந்தால் வென்றவரின் வெள்ளை யினமே இநதியாவில் பெரும்பான்மையினமாக இருந்திருக்கும். வட புலத்திலும், திரவிடரைத் திரவிடர் மீதே மோதவிட்டுப் பெற்ற வெற்றியில் பயனுற்ற ஆரியர், அரசியல் சாய்காலும் சமயத் தலைமையும் பற்றுக்கோடாக உயர்வு பெற்றனரேயன்றிப் போராட்டத தால் அன்று.

ஆரியர் வடபுலத்திற்கு வந்தபின் இனக்கலப்பால் தம் வெண் ணிறம், நீலவிழி, செம்மயிர், ஆகிய உடற்கூறுகளை இழக்கநேர்ந்தது. அதனைக்காக்கவே நால்வருணப் பகுப்பைப் புகுத்தினர். நால்வருணப் பகுப்பாலும் கூட அவர்கள் எண்ணியது நிறைவேறவில்லை. இன்று உடற்கூற்றுல் வெண்ணிறமும் நீலவிழியும் செம்முடியும் கொண்ட ஒரே ஓர் ஆரியனையும் காணமுடியாது. ஆரியர், இரண்டாவதாகத் தம் மொழியைக் காத்துக் கொள்ள நினைத்தனர். வேதகால ஆரியர் மொழி பேச்சுவழக்கில் நிற்க முடியாமல் இறந்துவிட்டது. மொழி

இறந்த நிகழ்ச்சி ஒன்றே ஆரியர் சிறுபான்மையினர் என்பதையும் அவர் ஓரிடத்தில் நிலைத்து வாழ முடியாமல் இடம் பெயர்ந்து அலைந்ததையும் தெளிவுபடுத்துகிறது. தமிழுக்கு ஈடாகத் தம் மொழி உயர்வு காக்கும் பொருட்டுச் சமற்கிருதத்தைச் செயற்கையாகப் படைத்துக் கொண்டனர். பழந்தமிழினின்றும் கிளைத்த மொழிகளே அவர்களுக்குத் தாய்மொழியாயின. அவர்கள் தோற்றத்தாலும் மொழியாலும் திரவிடராயினர். ஆரியர், மூன்றாவதாகத் தம் தெய்வங்களையும் தீ வழிபாட்டு முறைகளையும் காத்து நிலைநிறுத்த விரும்பினர். அவர்கள் வணங்கி வந்த இந்திரன், வருணன், அக்கினி, ஆகிய தெய்வங்களை இந்திய மக்களிடை எங்கும் புகுத்த முடியவில்லை. திரவிடரின் கருநிறக் கண்ணனை வேறு வழியிலலாமல் தெய்வமாக ஏற்றுக்கொண்டனர். நான்காவது வருணமான இடைக்குலத்தைச் சார்ந்த கண்ணன் முழுமுதற் கடவுளானது எவ்வாறு என எண்ணிப் பார்க்க. நாலாம் வருணத்துக் கண்ணன் தானே நான்கு வருணங்களைப் படைத்ததாகக் கீதையில் கூறுவது எத்துணைச் செயற்கையானது என்பதையும் கூர்ந்து நோக்குக. சிசின தேவன் என ஆரியரால் இகழப்பட்ட தமிழரின் முழுமுதற் கடவுளான சிவனே ஆரியரனைவர்க்கும் ஒப்ப முடிந்த கடவுளானன். தமிழாகமங்கள் சமற்கிருத ஆகமங்களாயின.

தமிழ் நாகரிகம், தீயோம்பி வழிபடாமல் மலர் தூவி வழிபடும் தமிழர் வழிபாட்டு முறை, ஆகியவற்றை ஏற்றுக்கொண்ட ஆரியர், இவற்றைத் தமிழரிடமிருந்து பெற்றேம் என்று நன்றியோடு சொல்ல மறந்து, எங்களுடையதே எனச் சமற்கிருத நிறப்பூச்சு தந்தாலும் உலகத்தவரின் கண்களுக்கு என்றேனும் ஒருநாள், உண்மை புலப்படாமற்போகாது.

## மொழி வளர்ந்தால் இனம் வளரும்:

மொழி வளர்ந்தால் நாடு வளருமா எனச் சிலர் அறியாமல் வினவுகின்றனர். தி.மு. நான்காம் நூற்றாண்டில் யூதர்கள் தம் எபிரேய மொழியை மறந்தனர். பல நாடுகளிலும் குடியேறினர். சென்ற நாட்டின் மொழியைக் கற்றுத் தாய் மொழியை அறவே கல்லாது போயினர். தாம் புகுந்த எந்த நாட்டிலும் அந்நாட்டுக் குடிமக்களாக ஆக முடியாமல் இட்லரின் கொடுமைக்கு ஆளாயினர். சொல்லொணாத் துன்பங்களைத் தாங்கி எங்கெங்கோ அலைந்து திரிந்து இறுதியில் இசுரேல் நாட்டைத் தாயகமாகப் புகலடைந்து 2400 ஆண்டுகளுக்குமுன் இறந்து கோவில்களில் மந்திர மொழியாக ஊசலாடிக் கொண்டிருந்த எபிரேய மொழிக்கு உயிரூட்டித் தாய் மொழியை வளர்த்தபின் இன்று யூதர் உலக அரங்கில் நிமிர்ந்து நிற்கின்றனர். சமற்கிருத வாணர் வெயிலில் தலை காட்டாமல் நிழலிலிருந்தவாறே சமற்கிருதத்தை உயிராகக் கருதி வளர்த்தனர். இன்றளவும் சமற்கிருதம் அவர்களை உயர்ந்த நிலையில் வாழ வைத்துக்

கொண்டிருக்கிறது. தாய்மொழியை மறந்த இனம் முன்னேறிய தாகச் சான்று காட்ட முடியாது.

இதனை நன்குணர்ந்திருந்த தமிழ்ச் சான்றோர் பழங்காலத்தி லேயே தமிழை முத்தமிழாக வளர்த்தனர். இயற்றமிழ், கற்றவரை உயர்த்தும். இசைத்தமிழும் நாடகத்தமிழும் கல்லாத தமிழரையும் தமிழ்ப் பண்பாட்டில் நழுவாது நின்று உயர வழி காட்டும். இந்தியாவைப்போல் மும்மடங்கு பரந்திருந்த குமரி நாட்டில், இடத் துக்கு இடம் பேச்சுத்தமிழ் வேறுபட்டுப் பல்வேறு கிளை மொழிகளாகத் தமிழ்மொழி பிரிந்து விடாமல் காக்க இசைத்தமிழும் நாடகத்தமிழும் பெரிதும் உதவின. பாணரும் விறலியரும் கூத்தரும் தென்மதுரைத் தமிழ்க்கழகப் பாடல்களை நாட்டின் வடகோடியிலும் இசைப்பர். நாடகம் நடத்திக் காட்டுவர். பரிசாகப்பெற்ற யானைகள் மீது இவர்ந்து நாடு முழுதும் திரிந்து நற்றமிழை, ஒரேவகைப் பேச்சுத் தமிழை இழையறுமல் நெடுங்காலங் காத்த பெருமை பாணர்க்கும் கூத்தர்க்கும் உரியதாகும். பாணர்க்கும் கூத்தர்க்கும் தந்த பரிசுகள் தமிழ் வளர்ச்சிக்குத் தந்த அறக்கொடைகளாகும். இன்றைய திரை யரங்க உரையாடலை நாட்டுப்புறச் சிறுவரும் பெரியவரும் எளிதாகப் பேசி மகிழ்வதை இன்றும் நாட்டுப் புறங்களில் காண்கிறோம். இசைத் தமிழும் நாடகத்தமிழும் அன்றைய தமிழகத்தின் முதியோர் கல்வித் திட்டம் என்பதையும், தமிழ்ப் பண்பாட்டைக் கட்டிக்காக்க முத்தமிழ் வளர்த்த தமிழ்ச் சான்றோரின் நுண்ணறிவையும் வியந்து பாராட்டா மலிருக்க முடியாது. "ஆங்கில இலக்கியக் கல்விதான் அமெரிக்க ஆங்கிலத்தையும் இங்கிலாந்து ஆங்கிலத்தையும் இணைத்து வைத் திருக்கிறது. ஆங்கில இலக்கியங்கள் இல்லாமலிருந்தால் அமெரிக்க ஆங்கிலமும் இங்கிலாந்து ஆங்கிலமும் வெவ்வேறு மொழிகளாகப் பிரிந்து விட்டிருக்கும். மொழி பிரிந்திருந்தால் இருவேறு இனத்தவ ராக அவர்கள் மாறி விட்டிருப்பர். ஆதலால் ஆங்கில இலக்கியத்தை ஆங்கில நாட்டைவிட உயர்ந்ததாக நாங்கள் மதிக்கிறோம்" என்று ஆங்கில அறிஞர் ஒருவர் ஒருமுறை கூறினர். தமிழ்மொழியை மூவேந்தர்கள் ஏன் உயிராகப் போற்றினர் என்பதை இனியேனும் அனைவரும் உணர்ந்தால் தமிழினம் மேம்படுவதை யாராலும் தடுக்க முடியாது.

தமிழினம் மொழியைக் காத்தது. ஆனால் மொழியின்கண் முன்னோரால் பேணி வளர்க்கப்பட்ட பல்துறை வளர்ச்சி தழுவிய நூற்செல்வங்களை இழந்து விட்டது. தமிழினத்துக்குரிய பண்பாட்டுக் கூறுகள் சிதறிக் கிடக்கின்றன. தமிழினத்துக்கே உரிய ஒழுக லாறுகள் முறையாகப் பேணப்படவில்லை. இக்காரணியங்களால் தன் தனித்தன்மைகளை இலைமறை காய்போல் வைத்துள்ள தமிழினம், மொழி வளர்ச்சியில் கருத்தூன்றி இனத்தைப் பிணைக்கும் பண்பாடு ஒழுகலாறுகளைச் செவ்வனே கடைப்பிடித்தால், தமிழனின் உயர்தனிச்

செம்மொழியும் உயர்நலப் பண்பாடும் அவனுக்கு இழந்த பெருமைகளை மீட்டுத்தரும். மொழி வளராவிடினும், தொழிற் பெருக்கமும் செல்வ வளமும் பெருகினால் நாடு முன்னேறிவிடும் என்பது உண்மையன்று. செல்வம் கொழிக்கும் எண்ணெய் வளக் குடாக்கடல் (Gulf countries) நாடுகள் உலக அரங்கில் வல்லரசாகவோ உயர்ந்த நாடாகவோ கருதப்படவில்லை. தொழில் பெருகிய அமெரிக்காவைவிட, செல்வம் பெருகிய அரபு நாடுகளைவிட அறிவியற் செல்வத்தைத் தேக்கி வைத்துள்ள செருமானிய மொழி, செருமானியர்க்கு உலகவரங்கில் உயர்வைத் தேடித் தந்துள்ளது.

**மொழி வளர்ச்சி ஒற்றுமை வளர்க்கும்:**

மூவேந்தர்கள் ஒருவரோடு ஒருவர் அரசியல் கருதிப் போரிடினும் மொழி அவர்களை ஒருங்கிணைத்து வைத்தது. ஓரினத்தைக் கட்டுக்குலையாமல் நெருங்க இணைக்கும் தலைமையாற்றல் வாய்ந்தது தாய்மொழியே என்பதைப் பண்டைத் தமிழர் அறிந்திருந்தனர். தமிழ்ப் பண்பாட்டின் தனிச்சிறப்புகளுள் இதுவும் ஒன்று.

சமயம் மக்களை ஒருங்கிணைக்கும் ஆற்றல் வாய்ந்தது என்று கருதப்பட்டது. ஆயின், கிழக்குப் பாகித்தானில் முகமதிய சமயம் வங்காள மொழி பேசும் முகமதியரையும், உருது பேசும் முகமதியரையும் ஒன்றாக இணைக்க முடியவில்லை. கிழக்குப் பாகித்தானம் தனி நாடாகி விட்டது. இலங்கையில் கிறித்தவ சமயத்தைச் சார்ந்த சிங்களவன் கிறித்தவ சமயத்தைச் சார்ந்த தமிழனை வெறுக்கிறான். மொழியின் எல்லையைக் கடந்து சமயத்தால் ஒற்றுமை உண்டாக்க முடியவில்லை என்பதற்கு இவை சான்றாகின்றன.

நிலைத்த அரசியல் கொள்கை மக்களை நெருங்க இணைக்கும் என்பதும் உண்மையன்று. பொதுவுடைமைக் கொள்கையை ஏற்ற சோவியத்து நாடும் சீனமும் கொள்கை ஒப்புமையால் ஒற்றுமை வளர்க்க முடியவில்லை. மொழி ஒன்றே அம்மொழி பேசும் மக்களை இணைக்கவல்லது என்னும் தமிழர் கொள்கையே விழுமிது என அறிக. உலக மொழிகள் அவ்வம்மொழியினரை ஒருங்கிணைக்கும். தமிழ் மொழி, உலக மொழிகளைத் தன்னோடு இணைத்துக் காட்டும் வேர்ச் சொல் வளம் கொண்டிருப்பதால் உலக ஒற்றுமைக்கு வழி காட்டும் சிறப்பு வாய்ந்தது. தாய்மொழி வளர்ச்சியில், கருத்துச் செலுத்தாத போது அம்மொழியில் பல கிளை மொழிகள் தோன்றித் தனித்தனியாகப் பிரிகின்றன. ஒரே மொழியினத்தார் தாய்மொழிக் கல்வியைப் போற்றாததால் பல இனத்தவராகப் பிரிந்து இனப்பூசல்களுக்கும் வித்திடுகின்றனர். மொழியை வளர்க்காத நாட்டார் பகைவர்களை வளர்க்கின்றனர். மொழியை வளர்க்கும் இனத்தார் நெருங்கிய இனத்தை வலுப்படுத்தி ஒற்றுமையாக வாழ்கின்றனர். இது வரலாறு கற்பிக்கும் பாடம். முத்தமிழ் வளர்த்த தமிழன் உலக மக்களுக்குக் கற்றுத்தந்த முதல் பாடம்.

(தொடரும்)

# கடலுக்கடியில் பழந்தமிழகம்!

தா பாண்டியன்.

அங்கேரியில் புயல் அடிக்கடி தாக்கும் பகுதி ஒன்று உள்ளது. அஃது அடிக்கடி புழுதியை வாரிக் கொண்டு வந்து மணல் மேடுகளை ஏற்படுத்திவிடுகிறது. இதை இப்பொழுது காடுகளை எழுப்பியும், காற்று வரும் திசையில் சுவர்களை எழுப்பியும், அதன் கொடுமையைக் குறைத்து விட்டனர்.

இதைக் கட்ட முயன்றபோது காற்றின் திசையை மாற்றி எங்கள் நாட்டின் பக்கம் திருப்பிவிட்டு விடாதீர்கள் எனப்பல நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்தன. எனவேதான் முழுமையான தடுப்புக்கு முயலாமல், மட்டுப்படுத்தி நிறுத்தியிருக்கிறார்கள்.

இந்தப் பகுதியில் சுவர் கட்டத் தொடங்கியபோது, அங்குப் புதையுண்டு போயிருந்த நகரங்கள் சிலவற்றைக் கண்டனர். கிரேக்கர்கள் தங்கியிருந்த முகாம்களும், உரோமாபுரிப் படையினர் தங்கியிருந்த இடங்களும் கண்டுபிடிககப் பட்டன. அவற்றை வரலாற்றுக் காட்சிக்கு இன்று காப்பாற்றி வருகின்றனர்.

அவர்கள் கட்டியிருந்த 'ஆம்பி' கலைக்கூடம் ஒன்றும், முழுமையான சிறைக்கூடம் ஒன்றும் அப்படியே சிதையாமல் இருக்கின்றன.

இதைப் பார்த்துவிட்டுத் திரும்பும்போது நம்நாட்டில் புதைபொருள் ஆராய்ச்சித் துறையினரால் அகழ்ந்து எடுக்கப்பட்ட அரப்பா மொகஞ்சதாரோ, அம்பி போன்ற இடங்கள், பற்றிப் பேச்சு வந்தது; நளந்தா பற்றியும் பேச்சு வந்தது.

அதே காலத்தில் காஞ்சியிலும் ஒரு பெரும் பல்கலைக் கழகம் இருந்தது என்று சொன்னேன். அவர்கள் படித்திருப்பதாகச் சொன்னார்கள். இந்தத் துறையில் திறவோரான ஒருவருடன் அன்று இரவு விருந்துக்கு ஏற்பாடாயிற்று.

அவர் பேசியதை இன்னொருவர் மொழி பெயர்த்தார்.

நான் தமிழ் நாட்டிலிருந்து வருகிறேன் என்று அறிமுகம் செய்யப் பட்டவுடன் அவர் எழுந்து வந்து கட்டித் தழுவினார்.

"உலகின் மூத்த நாகரிகம் படைத்த நாட்டிலிருந்து நீங்கள் வருகிறீர்கள். உலகிலேயே மூத்த முதல் நாகரிக மக்களைக் கொண்டது, உங்கள் நாடுதான் என்பது தெரியுமா" என்ற கேள்வியுடன் தொடங்கிய அவர். தமிழ்நாட்டின் பழைய மறைந்துபோன வரலாற்றைப் பற்றிப் பேசத் தொடங்கினார்.

'இந்தோனேசியா தமிழர் நாகரிகம் பரவியிருந்த நாடுகளில் ஒன்று. இன்றைக்கும் அங்குள்ள கோயில்களில், தமிழில்தான் வழிபாடு ஓதுகிறார்கள். ஆனால், தாங்கள் தமிழில்தான் ஓதுகிறோம் என்பதும் தெரியாமல், அதன் பொருளும் புரியாமல், மனப்பாடம் செய்து ஒப்புவித்துத் தள்ளிக்கொண்டிருக்கிறார்கள், நீங்கள் கேட்டதுண்டா?' என்று கேட்டார்.

'கம்போடியாவில் கண்டெடுக்கப்பட்டுள்ள "ஆங்கோர்" நகரம் உங்கள் நாட்டவரால், உங்கள் முன்னோர்களால் கட்டப்பட்டதும் தெரியும் அல்லவா' என்று கேட்டபோது, அதுபற்றி நான் ஏற்கனவே 'தாமரை'யில் எழுதியிருப்பதைச் சொன்னேன்.

'அது உங்களுடையது; நீங்கள் பார்க்க வேண்டும்; பாதுகாக்க வேண்டும்' என்று கூறிவிட்டு, 'உங்கள் நாடு இப்பொழுது எங்கே இருக்கிறது?' என்று கேட்டார். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது.

இந்தியாவின் தென்கோடிதான் எங்கள் தமிழ் நாடு என்று நிலநூற்படி சரியாகச் சொன்னேன்.

அவரோ சிரித்துக்கொண்டே, 'இல்லை, உங்கள் நாட்டின் பெரும் பரப்பு தென்கடலுக்குள் முழ்கிப்போய்ப் பன்னூற்றாண்டுக் காலம் ஆகி விட்டது. உங்கள் முன்னோர்கள் கட்டிய சில நகரங்கள் சிதையாமல், சிதறாமல் கடலுக்கடியில் கிடக்கின்றன.'

பெரும்பாலும் பைபிளில் வண்ணிக்கப்படும் நோவா காலத்து வெள்ளப் பெருக்கும் உங்கள் நாடு கடல்கோளால் மூழ்கியதும் சமகாலமாக இருக்கக்கூடும் என்றார்.

நோவா பேழை கதையா? வரலாறா? என்று கேட்டதற்கு, வரலாற்றுப்படி உண்மையே என்றும், அதற்கு அடிப்படைகள் கிடைத்துள்ளன என்றும் கூறியவர், யூதர்கள் குடும்ப வரலாறுகளை எழுதி வைக்கும் வழக்கம் இருந்ததால் அது குறிக்கப்பட்டது என்றும், வரலாற்றுக் குறிப்புக்களை எழுதும் பழக்கம் பிற நாடுகளில் அதிகம் இல்லாததால், அக் குறிப்புக் காணப்படவில்லை என்றும் சொன்னார். இலெமூரியாக் கண்டம் என்று ஒன்று இருந்ததும், அது கடலுக்குள் மூழ்கிப் போனதும் உண்மை தானா? என்று கேட்டதற்கு, உங்கள் நாடும், உலக நிறுவனங்களும் கூட்டாக முயன்றால் இன்னும் சில வற்றை எடுத்துக் கரைக்குக் கொண்டு வருவதும் இயலுவதே என்றார்.

எனக்கென ஒரு மாபெரும் அரண்மனை இருந்ததாகவும், அளப்பரிய செல்வக் குவியல் நடுவில், பல்லாயிரம் செல்வக் குழந்தைகளுடன் ஆடிப்பாடி மகிழ்ந்து கொண்டிருந்ததாகவும், அவை அத்தனையும் கடல் அலையால் அடித்துச் செல்லப்பட்டு, கட்டவும் துணியின்றி, நான் வறியவனாகிப் பதறி நிற்பது போன்ற உணர்வு நெஞ்சில் குத்தியது.

இலெமூரியாக் கண்டம் முழ்கிய கதையுடன் அவரது பேச்சு முடியவில்லை. தமிழ்நாட்டுக் கோயில் கோபுரங்களையும் புகழ்ந்து கொண்டே இருந்தார். கட்டிடக் கலையில் அதுதான், நுணுக்கமானது, மிக உயர் மட்டக் கட்டிடக்கலை. அதில் ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரே தேர்ந்திருந்த உங்கள் நாட்டின் நாகரிகம் தொன்மையானது என்பதற்கு அடிப்படை. மிக உயர்ந்த, பெரிய கோயில்களும், கோபுரங்களும் கட்டப்பட்டதற்கு, கடல் கொண்டதும், நிலம் மூழ்கியதுமே காரணம் என்றும் சொன்னார்.

'The riddles of the three Oceans'—புதிர்கள் அடங்கிய மூன்று கடல்கள் என்ற பொத்தகம், ஓராண்டுக்கு முன்பே வந்து விட்டது; இது எல்லா என்.சி.பி.எச். நிலையங்களிலும் கிடைக்கிறது. அதில் இலெமூரியாக் கண்டம் மூழ்கிக் கிடப்பது பற்றிய விளக்கங்கள் இருக்கின்றன. இதைப் படித்திருந்ததால் அதை மேற்கோள் காட்டினேன். மூழ்கிக் கிடக்கும் நமது முந்தைய வரலாற்றுச் சான்றுகளை என்றுதான் எடுத்துப் பார்க்கப் போகிறாமோ? காலம் வரும். துணையும் இருக்கிறது. இதைச் செய்வோர், செய்யும் இடத்திற்கு வரும்போது இது நடக்கும்.

—நன்றி: தாமரை. சன. 78.

# தனிம வரிசை

இல. க. இரத்தினவேல், அறி. மு.
பூதவியல் துறை, மதுரை மருத்துவக் கல்லூரி,
மதுரை - 20.

## 18. அரசனியை (ARSENIC) $As^{75}_{33}$

ஆண், பெண் என்னும் பாற்பகுப்பு உயிரினங்களுக்கு மட்டுந் தான் இருக்க வேண்டுமா, என்ன? பழங்கால மேலைநாட்டார் எல்லாப் பொருள்களையும் ஆண்பால் பெண்பால் என இருபால் ஆகப் பிரிந்தனர். திறவுகோலைக்கூட, அதன் அமைப்பை நோக்கி ஆண் திறவு கோல், பெண் திறவுகோல் என நாம் இன்றும் கூறுவது உண் டல்லவா! இவ்வாறான பாற்பகுப்புக்கு மாழைகளும் (metals) உட் பட்டன. மாழைகள் பொதுவாக ஆண்வகை, பெண்வகை எனப் பகுக்கப்பட்டன. ஒரு மாழையுள்ளே கூட ஆண், பெண் என இரு பிரிவுகள் இருந்தன எனக் கருதப்பட்டு வந்தது.

**அரசன் ஆண் மகனே!:** ஆண்மகன்தான் அரியணை ஏறுவது உலகெங்கும் பெரு வழக்கமாக இருந்துவந்தது. எனவே அரசன் என்றாலே அவன் ஆண்மகன் என உணர்த்தும். ஆண் பாலைக்குறிக்கும் 'ன்' என்ற னகரவீறு இல்லாவிடினும், அல்லது அரசு என்றாலும் ஆண்மகனையே குறித்துவந்தது. இன்றும் கூட, குறி கூறுவோர், "உனக்கு ஓர் ஆண்மகவு பிறக்கும்" என்பதை "அம்மே! உனக்கோர் அரசு பிறக்கும்" என நடப்பட நவில்கின்றனர். எனவே அரசன் என்பது ஆகு பெயராய் ஆண்பாலையும் சுட்டுகிறது.

**கிரேக்க அரசன்?!:** அரசன் கிரேக்க மொழியில் arsen என ஆண்பாலைக் குறிக்கிறது. மாழைகளை (metals) ஆண்பால், பெண் பால் எனப் பகுக்கத் தொடங்கிய காலத்தில், முதலாவதாக விளங்கிய புதிய மாழையை Arsen என்ற வேர்ச்சொல்லில் இருந்து Arsenic என்றனர். எனவே அந்த மாழையை அரசனியை என வழங்குவது தானே பொருத்தம்!

மாழைகளுள் உயர்வாக ஆண் தன்மை அளிக்கப்பட்ட அரசனியை ஓர் அரைகுறை மாழை (semi metal) யெனப் பின்னர் அறியப்பட்டது. (பெண் மாழை போலும்!). இந்நாளிலோ, அது வெள்ளை அரசனியை என்னும் மாழை அரசனியை யாகவும், வெறும் மஞ்சள் அரசனியை யாகவும் பகுத்தறியப் பட்டுள்ளது. மூன்னதன்

ஒப்படர்த்தி 5·73; பின்னதன் ஒப்படர்த்தி 2·03. தனிமப்பட்டியலில் பொசுப் பொறைப் பொன்மத்துக்கும், வெண்ணீல அன்மத்துக்கும் (non metal) இடையில் இருக்கும் இத் தனிமம் பொன்மம் ஆகவும் காட்சியளிக்கிறது. அஃதாவது இஃது 'ஆண்பெண் அலி'யாக விளங்குகிறது. எனினும் இயைபியலில் இஃது அன்மம் ஆகவே கருதப்பெறும்.

**வரலாறு:** அரசனியை ஒரு நச்சுப்பொருள். நச்சுப்பொருள்கள் பலவற்றையும் பழங் கிரேக்க உரோமர்கள் arsenic என்றே குறித்தனர். இவற்றைத் தோண்டியெடுக்க அடிமைகளைப் பயன்படுத்தினர். இதில் கணக்கற்ற அடிமை மக்கள் செத்தொழிந்தனர்.

'அரசனியை சல்பைடு' (arsenic sulphide)-ஐப் பற்றிக் கி.மு. 4-ஆம் நூற்றுண்டு அரிசுடாட்டிலும், கி.மு. முதலாம் நூற்றுண்டுப் பிளினியும் கருத்துரைத்துள்ளனர். கீழ்நாட்டு மக்களும் அரசனியையின் பண்பை அறிந்திருந்தனர். வயல்களில் எலி மருந்தாகவும், பூச்சி கொல்லிகள் ஆகவும் சீனர்கள் இதனைப் பயன்படுத்தினர்.

13-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த மகாஆல்பர்ட் (1192–1280) என்ற செர்மானியர் பொன்னிறமி (orpiment) எனப்படும். 'அரசனியை சல்பைடு'–ஐ வழலை (soap)உடன் சேர்த்துச் சூடுபடுத்தும் பொழுது ஒரு மாழைப்பொருள் தோன்றுவதைக் கவனித்துக் குறித்திருக்கிறார். அரசனியையை முதலாவதாகக் கண்டவர் இவராகவேயிருக்கக்கூடும். பின்வந்த அறிஞர்கள் இதனை அரைகுறை மாழையெனக் கருதினர் எனினும் அரசனியைத் தனியான தனிமம் என ஆய்ந்து விளக்கிக் காட்டியவர் குரோடர் (Schroder) ஆவார்; ஆண்டு 1649.

அரசனியை மூவுயிரகை (arsenic crioxide)-ஐக் கரியுடன் வாலை உலையில் இட்டுப் பகுத்து, மேற்கூறிய மாழை அரசனியையைப் பெறலாம்.

செம்பு, ஈயம் போன்றவற்றைப் பிரித்தெடுக்கும்பொழுது நச்சுப்பொருளான அரசனியை உயிரகை (Arsenic oxide) மிகுதியாய்க் கிடைக்கிறது. சுவீடன் நிறுவனம் ஒன்று இவ்வாறு மிகுதியாய்க் கிடைத்த அரசனியை உயிரகையைக் கெட்டியான உருள் கலன்களுள் அடைத்துக் கடலுக்குள் அமுக்கியது.

**பயன்:** தனிம அரசனியை துரு ஏறுவதையும், அரிப்பையும் தடுக்கும். ஈய மின்சேமக் கலங்களில் (lead accumulators)

வன்மையூட்டியாகவும், ஈய-வெளிய-வெண்ணீல மாழைக் கலப்பால் ஆன 'தாங்கி அளே' (learing alloy)களில் கடினப்படுத்தியாகவும் பயன்படுகிறது.

அரசனியை மூவுபிரகை நிறநீக்கியாகவும், நிறமி (Colouring Agent) யாகவும் செயல்படும். சீனர்கள் தங்கள் சுவடிகளில் நீக்க வேண்டிய வரிகளை அழிக்க அரசனியையைத் தடவி வந்தனர். நச்சுத் தன்மை மிகுந்தது அரசனியை. இதன் கூடிகைகள் (Compounds) பூச்சி கொல்லிகளாகவும், களை நீக்கிகளாகவும் பயன்படுகின்றன.

மேகப்புண் (syphillis) என்னும் பாலுறவு நோய்க்கு 'நியோ ஆர்சிபீனமைன்' (Neoarsphenamine) என்னும அரசனியைக் கூடிகை பரவலாகப் பயன்பட்டு வந்தது. தூக்கநோயை நீக்கவும், இளைப்பிருமல் (asthma) நோயை விலக்கவும் இதன் கூடிகைகள் பயன்பட்டன. எனினும் இவை குடலின் உட்சுவர்த் தசைக்கும், பிற உறுப்புகளுக்கும் அழற்சியையூட்டும். நரம்புத் திசுவைத் தாககும். இதனுல்தான் (பேசில் வாலெண்டீடினின் வழியாக) அரசனியை பாடுகிறது;

*உலையில்எழும் புகையால்''நச் சாவி''''கொடும் பேய்''என்(று)*
*உரைபடும்நான் நஞ்சினின்று விடுபடினே தேர்ந்த*
*கலையாலும் கைத்திறனு லும்விலங்கு மக்கள்*
*கடும்நோயை யும்தீர்ப்பேன்: சடுதியிலே! அதனுல்*
*நிலையில்லா என்னை அரும் பெருங்கவனக் காப்பால்*
*நெடுநோட்டத் துடன்சரியாய் உருவாக்கி விடுக!*
*இலஎனிலோ நஞ்சான நான்நஞ்சாய் நின்றே*
*இம்மாந்தர் பலர்குலையைக் கிழித்திடுவேன் அன்றே?!*


## "தென்மொழி" சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

| | உள்நாடு | கொழும்பு | வெளிநாடு |
|---|---|---|---|
| ஆண்டுக் கட்டணம்: | 12 உருபா | 24 உருபா | 24 உருபா |
| அரையாண்டுக் கட்டணம்: | 6 ,, | 12 ,, | 12 ,, |
| தனியிதழ்: | 1 ,, | 2 ,, | 2 ,, |

ஓரிதழுக்கு உருபா 2 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர் எழுதிக் கேட்க!

# மறைமலையடிகள் பிள்ளைத்தமிழ்.

புலவர். இறைக்குருவனார்.

36

(வேறு)

நற்றமிழ் நலியத் தமிழர் தொடர்ந்து
[1] நண்ணார்க் கடிமையுற
நாட்டுப் பொதுமைக் கோட்பா டென்று
நண்ணிய புன்மொழியை
முற்றாய்ந் திந்தி பொதுமொழி யாவென
முறையுற விருமொழியின்
[2]மொய்ம்புறு நூல்கள் செய்து வழங்கி
[3]முனையின் முனைவுற்றுச்
[4]செற்றார் மருளுற வணியணி யாகச்
செந்தமி ழோரீண்டச்
செறுபடை கொண்டு [5]மறுதலை வென்ற
சீர்த்திய! செந்தமிழக்
கொற்றவ னெனநன் குற்றுழிக் காப்போய்
கொட்டுக சப்பாணி!
கொற்றத் தமிழின் நற்றவ வாழ்வே
கொட்டுக சப்பாணி!

37

[1]தேவர் குறளும் பாவயின் அமுதச்
செந்தமிழ் மூதாட்டி[2]
தெளிவாய் உணரத் தெரிவித் தருளிய
திருநூல் வரிசைக்கண்

---

36—1. நண்ணார்-பகைவர்.
2. (1) இந்தி பொதுமொழியா?
(2) Can Hindi be a lingua franca of India.
3. முனை—போர் முனை.
4. செற்றார்
5. மறுதலை } பகைவர்.

37—1. "தேவர் குறளும் திருநான் மறைமுடிபும்" எனும் வெண்பா.
2. மூதாட்டி—ஔவையார்.

மூவர் தமிழை யடுத்து விளங்கும்
முனிமொழி யிதென்று
முன்னோர் காட்டிய வடநூ லன்று
முனனூற் கடையென்று
[3]நாவலன் கூறிய உரையை இலக்கண
நன்மரி புக்கொவ்வா
நலமில் லுரையென முன்னோர் உரைநல
நவிலலின் நடுவுநிலைக்
கோவென யாவரும் ஏத்துறு பெரியோய்
கொட்டுக சப்பாணி!
கொற்றத் தமிழின் நற்றவ வாழ்வே
கொட்டுக சப்பாணி

38

வளருந் தமிழில் புதுமைக் கதைகள்
வரையும் நன்முறையை
[1]வாழுஞ் சூழலில் அன்றியும் முன்னை[2]
வழக்கினி லும்வைத்தே
இளமை மணமுங் கைம்பெண் நிலையும்
எய்திய குயிலம்மை[3]
எழிலுறு தெய்வ நாயக நம்பிக்(கு)
எழுதிய கடிதங்கள்
வளமுறு நாக நாட்டர சியெனும்
[4]வல்லியின் வாழ்வியல்கள்
வகையாய்ப் புனைந்து காட்டிய தகையாய்
வையத் தினியென்றும்
கொளவரு மாப்புகழ் நிலவுறு பெரும
கொட்டுக சப்பாணி!
கொற்றத் தமிழின் நற்றவ வாழ்வே!
கொட்டுக சப்பாணி!

39

இளமையிற் கொண்டான் இறப்பக் கைம்பெண்
எனுநிலை தாமெய்தி
எல்லையில் அல்லல் அழுந்துறு மகளிர்
இடர்வாய் மீண்டேறி
உளமிசை வாரை மறுமணங் கூடி
ஒழுக்கத் துடன்வாழ
உள்ள மிரங்கித் திருந்துக வென்றே
உரைத்தரு ளியதன்றி

---

3, நாவலன்—சபாபதி நாவலர்.

38—1. வாழுஞ் சூழலில்—இற்றைச் சூழலில்-இயற்றியது கோகிலாம்பாள் கடிதங்கள்.

2. முன்னை வழக்கிலியற்றியது நாகநாட்டரசி.

3. குயிலம்மை—கோகிலாம்பாள். 4. வல்லி—குமுதவல்லி.

இளமை மகளிரை முதியர் மணக்கும்
இழிநிலை மாற்றியவர்க் (கு)
ஏற்புறு கைம்பெண் மகளிரை வரைகென
இசையுங் கருத்துலகம்
கொளநல மிக்க அறிவுரை தந்தோய்
கொட்டுக சப்பாணி!
கொற்றத் தமிழின் நற்றவ வாழ்வே
கொட்டுக சப்பாணி!

40

நூலா சிரியன் உரையா சிரியன்
நூல்நுவல் ஆசிரியன்
நுட்ப முணர்த்துஞ் சமயா சிரியன்
நுண்கலை யாசிரியன்
[1]பாலா சிரியன் தாளா சிரியன்
பதிப்பா சிரியன் மெய்ப்
பாடுறு நாடக இசையா சிரியன்
[2]பண்டுவ வாசிரியன்
[3]காலா சிரியன் மொழிநூல் அறிவியல்
காட்டுறு மாசிரியன்
கவினுறு தமிழில் [4]வினைநடை முறைகள்
காணு சிரியெனெனக்
[5]கோலா சிரியக் குலவுறு புகழோய்
கொட்டுக சப்பாணி!
கொற்றத் தமிழின் நற்றவ வாழ்வே
கொட்டுக சப்பாணி!

---

39—இளம்பருவக் கைம்பெண்கள் மறுமணங்கூட ஆவன செய்ய வேண்டுமெனவும், முதிய ஆடவர் மணக்க விரும்பின் கைம்பெண் களையே மணக்கத் தூண்ட வேண்டுமெனவும் அடிகளார் தமது சீர்திருத்தக் குறிப்புகளில் கூறியுள்ளார்.

40—1. பால் ஆசிரியன்—பாலியல் நூலாசிரியன்.
2; பண்டுவம்—மருத்துவம்.
3. கால + ஆசிரியன் = காலாசிரியன்.
4. வினை நடை முறைகள்—கரணங்கள்—சடங்குகள்.
5. கோல் + ஆசு + இரிய = கோலாசிரிய—திரண்ட குற்றங்கள் நீங்க.

# ஈழத் தமிழரின் இன்றைய நிலை.

க. அரசவினியன் (அரசமனோகரன்) பொறி.இ
இலங்கை.

மேற்படி உயர்கல்வியைத் தமிழினத்தவருக்கு இல்லாமற் செய்வதன் மூலம் பொருளியல் வகையாலும் அடி விழுந்தது. இந்த அடியினூடாக ஒரு சிலர் உயர்கல்வி கிடைக்கப்பெற்றுத் தமது திறமையை வெளிப்படுத்தினுலும் தொழில் வாய்ப்பு முயற்கொம்பே. 'சிங்களத் தகைமை' போன்ற கட்டுப்பாடுகள் தமிழனின் கழுத்தை இறுக்கிய வண்ணமே உள்ளன. இதனை விடுத்து நேரடியான பொருளியல் துறைகளான கைத்தொழில், கமத்தொழில் போன்றவற்றை எடுத்தால் அங்கும் கீழான நிலையே. கண்ணுடி, பாசிகம் (குளோரின்), பஞ்சுதை போன்ற எத்தனையோ பொருட்களை உருவாக்கக்கூடிய மூலமூளை-வளங்கள் தமிழீழத்திலே இருப்பினும் அரசோ தானும் உதவி செய்து தொடங்கி வைக்காது. யாராவது செய்ய முயன்றுல் உரிமமும் வழங்காது. வெளிநாடுகளின் எந்த வகையான உதவியும் தமிழிடங்களுக்கு அளிக்கப்பட்டது கிடையாது. வெளிநாடுகளிலிருந்து பெறப்பட்ட தகரிகள் (பீரங்கிகள), இயந்திரத் துமுக்கிகள், போர் வானூர்திகள், குண்டுகள், கப்பல்கள் என்பன மட்டுமே தமிழீழத்துக்கென "வழங்கப்படுகின்றன". கமத்தொழிலை எடுத்தாலும் தமிழருக்கு எந்த வகையான உதவியும் கிடையாது. அது தான் போகட்டும் என்றுல், புணை போன்ற தமிழிடங்களிலே காடு வெட்டிக் கழனிகளாக்கிக் காலங்காலமாக வேளாண்மை செய்து வருகின்ற தமிழர்களைக் காவற்படையினர் படைக் கருவிகளொடு சென்று துரத்திவிட்டு, அங்கெல்லாம் சிங்களவரைக் குடியமர்த்தி, அவர்களுக்குப் பாதுகாவலராயுமிருந்து வருகின்றனர். 'கறையான் புற்றெடுக்கப் பாம்பு குடிகொண்ட கதை' இவ்வாறுனதை விடுத்து, அரசினரின் திட்டமிட்ட குடியேற்றங்கள் பல நாளுக்கு நாள் நடந்து கொண்டே வருகின்றன.

இவற்றின் மூலம் தமிழரின் வழிவழிஉரிமை நிலம் பறிபோகின்றது. காலவோட்டத்திலே தமிழன் சின்னுபின்னப் படுத்தப்பட்டுத் தனக்கெனவோர் எல்லையுள்ள நிலவமைப்பு இல்லாமல், தீவு முழுவதுமே சிறுபான்மையினஞக அடங்கவேண்டிய நிலைவரும். அதன் பின்னர் அவன் குரல் ஓங்காது. அவன் அழிவான். மொழி வாழ-இனம் வாழ-பண்பாடு வாழ நிலம் எவ்வளவு முகாமையானது என்பதை, பர். இராதா குமுட் முக்கேசி (Dr. Radha Kumud Mookerjee) என்பார் தமது இந்து நாகரிகம் (Hindu Civilization) என்ற நூலிலே பின்வருமாறு மொழிகின்றுர். The first condition of the progress of a people in political life and civilization is its possession of a fixed and definite piece of territory which it can call and serve as its own mother country. A people that has not found a home for itself but lives in unstable and

unsettled conditions in unrest and uncertainity lacks the conditions in which culture and civilization can take their rise; The nomadic is one of the honest stages of civilization. A grea. handicap to the political development of the Jews has been that they have not united to build up a fatherland for themselves. The country is to a nation what the body is to the individual. It is necessary for its self expresssion.

(அரசியல் வாழ்விலும் நாகரிகத்திலும் முன்னேற விரும்பும் எந்த இனத்தவர்க்கும் முதலாவதாகத் தேவைப்படுவது தமது தாயகம் எனக் கூறிப் பணிபுரிய வரையறை செய்ய செய்யப்பட்ட நிலைபான நிலப்பரப்பினை வைத்திருத்தலேபாகும். தாயகம் எனக் கூறிக் கொள்வதற்கு ஒரு நிலைபான நிலப்பரப்பு இல்லாத நிலையில் திடமற்ற நிலைபேறு பெருத அமைதிபற்ற நிலையில் எதிர்காலத்தைப் பற்றித் தெளிவான சிந்தனை உருவாகாத நிலையில் வாழ்பவர்கள், தம் பண்பாடும் நாகரிகமும் எழுச்சி பெறுதற்கேற்ற சூழ்நிலையைப் பெருதவர்கள் ஆவர். நாகரிகத்தின் மிகக் கீழ் நிலையில் உள்ளோர்தாம் நாடோடிகள். தமது தாயகத்தைக் கட்டியெழுப்புவதற்கேற்ற ஒற்றுமை இல்லாததே யூதர்கள் தம் அரசியலில் உணர்ச்சி பெறுவதற்குத் தடையாக இருந்திருக்க வேண்டும். எப்படித் தனிபொருவனுக்கு உடலோ, அது போல ஒரு தேசிய இனத்துக்கு அதன் நாடாகும். தன்னை உணர்த்த இது இன்றியமையாததாகும்.)

மேற்படிக் கருத்தைப் பேராசிரியர் 1935-இல் குறிப்பிட்டார். இந்த இடத்திலே, திருமூலரின்,

*உடம்பார் அழியின் உயிரார் அழிவார்*
*திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்*
*உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே*
*உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே*

என்ற திருமந்திரத்தை எண்ணுவதும் பொருத்தமுடையது. முசுலிம்களுக்கெனப் பாகித்தானை உருவாக்கிய முகம்மது அலி சின்னு அவர்கள் 1941-இல் தமது மாணவர்களுக்குக் கூறியதாவது:

Of course we have declared on hundreds of platforms that we are not a minority, quite right, we are not a minority. We are a nation, and a nation must have a territory. What is the use of merely saying that we are a nation? A nation does not live in the air. It lives on the land, it must govern the land, and must have a territoral state and that is what you want to get. Remember, it is not a small job. It is the bigger job that you have undertaken in your life since the fall of the moghul empire.

(நூற்றுக்கணக்கான மேடைகளில் நாம் சிறுபான்மையினரல்லர் என முழங்கியது உண்மையே. நாம் ஒரு தேசிய இனம்

என்பது உண்மைதான். ஒரு தேசிய இனம் தனக்கொரு நிலப்பரப்பை வைத்திருக்கவேண்டும். வெறுமனே நாம் ஒரு தேசிய இனம் என்று கூறுவதில் என்ன பொருள்? தேசிய இனம் அந்தரத்தில் வாழ முடியாது. நிலத்திற்றான் வாழ்கிறது. அந்நிலத்தையே ஆள வேண்டும். எல்லைப்பரப்புள்ள அரசும் வேண்டும். அதைத்தான் நீங்கள் பெற விரும்புகிறீர்கள் இது ஒரு சிறிய பணியன்று என்பதை நினைவில் வைத்திருங்கள். மொகலாயப் பேரரசு வீழ்ச்சியுற்ற பின் நீங்கள் பொறுப்பேற்றுள்ள மிகப்பெரிய பணி இதுதான்.)

மேற்கண்ட கூற்றுகளெல்லாம் தமிழீழத்தின் தேவையை எமக்கு உணர்த்தி நிற்கின்றன. அவையெல்லாவற்றையும் விட, தமிழரின் வரலாறே இவற்றை நன்கு அறியத்தருகின்றது 1858-ஆம் ஆண்டு மே, சூன் மாதங்களிலும் 1977-ஆம் ஆண்டு ஆகத்து, செப்டம்பர் ஆகிய மாதங்களிலுமாக நடைபெற்ற இரண்டு பெரிய இனப் படுகொலையின்போதும் புகைவண்டி, கப்பல், வானூர்தி என்பன மூலம் தமிழன் எங்கே ஓடினான்? தமிழீழத்தை நோக்கி! நூறு ஆண்டுகளுக்கும் மேலாகச் சிங்களப் பகுதிகளிலே வாழ்ந்து வந்தவரும் தமிழீழத்திலே நிலமோ உறவினரோ அற்றவருமான எத்தனையோ ஏதிலிகள் தமிழர் என்ற காரணத்தால் தமிழீழத்தை அடைந்தனரே! இவையெல்லாம் எதனை உணர்த்துகின்றன? தமிழன் வாழ— தமிழ் வாழ—தமிழர் பண்பாடு வாழ, தமிழர் நிலம்—தமிழீழம் தேவையானது என்பதை இவ்வளவு தேவையாக—தமிழினம் என்ற உயிர் வாழவேண்டிய உடலான நிலமோ நாளுக்குநாள் பறிக்கப்பட்டுக் கொண்டே வருகின்றது. எத்தனையோ தூய தமிழ்ச் சிற்றூர்களின் பெயர்கள் இன்று மாற்றப்பட்டுள்ளன. எடுத்துக் காட்டாக,

| தமிழ்ப் பெயர் | அரசால் இடப்பட்ட சிங்களப் பெயர் |
|---|---|
| பட்டிப்பளை | கல்லோயா |
| குமரேசன் கடவை | கோமரன்கடவ |
| மாடாட்டுகமம் | மடாட்டுகம |
| கந்தளாய் | சேருவில |
| வந்தாறுமூலை | வண்டறமூல |

தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளிலே கூடத் தாமிட்ட சிங்களப் பெயர்களின் பலுக்கலிலேயே எழுதுகிறார்கள். யாராவது அதனை மீறினால் அதற்கான தண்டனை, வேலை நீக்கம். அண்மையிலே திணைக்களமொன்றிலே வேலை பார்த்த தமிழரொருவர் இலங்கைப் படத்தினை வரைந்தபோது அம்பாறை என்ற இடத்திற்கு அவர் ஆங்கிலத்திலே 'AMPARAI' என்று எழுதியுள்ளார். முன்னைய படங்களிலே அவ்வாறேயுள்ளன. அஃது ஒரு தமிழ் நிலமும் கூட. ஆனால் ஆட்சியாளரோ 'AMPARA' என்று போடாத குற்றத்திற்காக அவரை வேலை நீக்கம் செய்துள்ளனர். இவ்வாறாக நிலத்தை அழிப்பதோடு லக்சல, சலுசல, ஒசுசல, சாதிக சம்பத மகாசன சம்பத,

# வரவேற்பும் வாழ்த்தும்!

(கடந்த 23—1—78 அன்று, ஈரோடு பசுமைப்பணி மன்றத்தின், ஆறுவது நிலவுக் கூட்டத் தொடக்கத்தில், ஆசிரியர் அவர்களுக்குக் கொடுத்த வரவேற்புரையும், வாழ்த்துரையும்.)

இனப்பற்றே இல்லாத இழிந்தோ ராகி
    எடுப்பார்கைப் பிள்ளைகளாய் இன்றும் மாறித்
தனக்கென்றே ஒருகொள்கை கொள்ளா ராகித்
    தனித்தன்மை தனிப்பெருமை இழந்தோ ராகித்
திணையளவும் தன்மானம் என்ப தின்றிச்
    சூடின்றிச் சுரணையின்றி வாழு கின்ற
இனம்மீண்டும் தழைத்தோங்கத் தொண்டே செய்யும்
    எம்தலைவ! பெருஞ்சித்திர! வருக! வாழ்க!

இடித்திடித்துச் சொன்னாலும் கொஞ்ச மேனும்
    ஏறுத மூளையராய் மாறி யின்று
தடிகொண்டே அடித்தாலும் உறைத்தி டாத
    தடிப்பான தோலுடைய விலங்கே போலத்
துடிப்பின்றி உணர்வின்றி வாழு கின்ற
    தமிழர்களுக் குணர்வூட்டி எழுச்சி யூட்டும்
கடுந்தொண்டு பெருந்தொண்டு புரியு மெங்கள்
    குலவேறே! பெருமறவா! வருக! வாழ்க!

கடுந்தொண்டு பெருந்தொண்டாம் உனது தொண்டு;
    கடுகளவும் தன்னலமில் லாத தொண்டாம்!
இடும்பைகளை வரவேற்கும் ஈகத் தொண்டாம்!
    இருந்தாலும் அதுவுனக்கோ இனிக்கும் தொண்டாம்!
கொடுந்துன்பம் சிறைக்கொடுமை ஏற்கும் தொண்டாம்!
    கூட்டைவிட்டே ஆவியையும் பிரிக்கும் தொண்டாம்!
அடிமைகளை விடுவிக்கும் அருமைத் தொண்டே
    ஆற்றுகிற விறல்மறவ! வருக! வாழ்க!

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

போல போன்ற இன்னோரன்ன பல சிங்களச் சொற்களை வேண்டு மென்றே தமிழிலே கையாளுகின்றனர். இதனால் எமது மொழி, பண்பாடு என்பன சிதைவுறுகின்றன. சமயத்தை எடுத்து நோக்கி னாலும் எந்தச் சமவுடைமை நாட்டிலும் இல்லாத ஒரு 'புதினம்'— இங்கு 'அரச மதம்' என்று ஒரு மதம் உள்ளமை. அதுவே 'புத்த மதம்'! தமிழீழத்திலே கூட அரச மரம் இருந்தாற் போதும் அங்குப் புத்தனின் சிலையை வைக்க முயலுவார்கள். அதுமட்டுமன்று ஆதியிலே சிங்களவரின் இடம் என்றும் கூறுவார்கள். தமிழனும் ஒரு காலத திலே புத்தனை ஆதரித்தானென்பது, அவர்களுக்கு எங்கே புரியப் போகின்றது. இந்த இடத்திலே இன்னுமொன்றையும் குறிப்பிடுவது நன்று. அதாவது, இலங்கையில் நடந்த எந்த வகையான தமிழ ரெதிர்ப்பு இயக்கங்களையோ அல்லது இனப்படுகொலைகளையோ முன் னின்று நடாத்துபவர்கள் புத்தனின் அன்பைப் பரப்ப வேண்டிய 'புத்தகுருமார்'களே ஆவர். —(தொடரும்)

இனத்தொண்டு புரிந்ததந்தை மறைந்து விட்டார்
இனியதற்கு யாருமில்லை என்ற என்றன்
மனவேக்கம் போக்குபவன் நீதான்! நீதான்!
வல்லடிமை மீட்சிப்போர்த் தலைவன் நீதான்!
எனவேதான் உனைக்காண ஓடி வந்தேன்
இருகண்ணால் உனைவிழுங்கிச் செரித்துக் கொண்டேன்!
நினைவிதனை நிலையாக்க வந்த வீர!
நற்றமிழர் பேரேறே வருக! வாழ்க!

(பாவலர். கொ. செ சின்னப்பா, கொம்மக் கோவில்)

குமரி முதலாய் இமயம் வரையில்
அமைத்தாட்சி ஓர்குடைக்கீழ் ஆண்டான்—சமன்செய்தே
அன்று தமிழன் அளந்தான பெரும்புகழை;
இன்றோ இவனடிமை ஏன்? 1

ஏனென்று கேட்டே எழுந்தான் ஒருவனிங்கே
தானென்று வந்து தமிழர்தம்—கூன நிமிர்த்திக்
கொள்கைப் புலியாகக் கோதில் தமிழ்த்தாயின்
பிள்ளை பெருஞ்சித்திரனைப் பேசு! 2

பேசும் மொழிதமிழ் பேணப் பிறந்திட்ட
மாசுமரு வில்துரை மாணிக்கம்—தூசு
பகைவரெனத் தோள்தட்டும் பாவலன் றன்னைக்
குகைவாழ் புலியென்று கூறு! 3

கூறு பகைவர்க்குக் கொடுத்தோடு நாட்டையாளக்
கூறு தமிழா! குலந்தழைக்கு—மாறு நீ
என்றுநிதம் பாடி எழுச்சியூட் டும்இவனே
தென்மொழிக் காவலன் தேர்! 4

(வேறு)

தின்னச் சோறு கிடைத்தால் போதும்
தெருநாய் எனவே திரிவான்!—தமிழன்
தன்னை மறந்து தன்புகழ் சிதைத்துத்
தழுப்பேறி அடிமை புரிவான!—தன்
முன்னைப் புகழை மூத்த புகழை
மூடிக் குழியில் புதைப்பான்!—அட
அன்னைத் தமிழை ஆண்ட தமிழை
அவனே முனைந்து சிதைப்பான்!

எண்ணின் இதைநாம் இவனது செயலை
இதயம் கனத்தே வலிக்கும்!—மனப்
புண்ணுக்கு மருந்தாய்ப் புகழ்க்கு விருந்தாய்ப்
புவியிடைத் தென்மொழி ஒலிக்கும்!—அட
திண்ணமுடன் மனத்தெளிவு பிறந்திடத்
தென்மொழி நம்மைப் பிணிக்கும்!—அது
கண்ணுக்கு விருந்தாய்க் காட்சிக்கு விருந்தாய்க்
கடமைக ளாற்றப் பணிக்கும்.

(பாவலர். தமிழ்க்குமரன்—ஈரோடு)

# மக்களவை

## தென்மொழி அன்பர்களுக்கொரு வேண்டுகோள்!

**ம: 218:** பெருமதிப்பிற்குரிய ஐயா அவர்களுக்கு வணக்கம். தென்மொழியில் 'இலங்கைத் தமிழா பக்கம்' என்ற தனிப்பகுதி ஒன்று ஈழததமிழர் செய்திகளுக்காக ஒதுக்கப் பட்டிருப்பது கண்டு பேருவகை அடைகிறேன். அதற்காக உங்களைப் பாராட்ட நான் தகுதி படைத்தவன் அல்லன் என்றாலும், என் ஈழத்தமிழ் நண்பர்களின் சார்பில் எனது வாழ்த்தைக் கூறக் கடமைப்பட் டிருக்கிறேன். உண்மையிலேயே தமிழகத் தமிழர்க்காகாட்டும், ஈழத்தமிழர்க்கா கட்டும், ஏனைய நாட்டுத் தமிழர்களுக்காகட்டும் அவர்களின் நேர்மையான உரிமைகளுக்குக் குரல் கொடுக்கத் தென்மொழியால் மட்டுமே இயலும் என்பது என்போன்றவரின் திடமான நம்பிக்கை.

தமிழ்நாட்டிலே தமிழர்களால் நடத்தப் பெறுவதாகச் சொல்லப் பெறுகின்ற-விளம்பரப் படுத்தப் பெறுகின்ற-ஏதாவது ஓர் ஏடாவது ஈழத்தமிழர்கள் நிலைபற்றிக் குரல் கொடுக்காவிட்டாலும்-குறைந்த பக்கம் செய்திகளையாவது வெளியிடுகிறதா? முன்னுக இருட்டடைப்பு அன்றோ செய்து வருகின்றன. நானும் பல ஏடுகளுக்குக் குறிப்பாகத் தமிழர்களுக்காகவே இருப்பதாக மார்தட்டும் திராவிடர் இயக்கங்களின் ஏடுகள் உட்பட எழுதிப் பார்த்து விட்டேன். ஏதோ அரசியல் ஊதியத்திற்காகச் சில நேரங்களில் சில செய்திகளை வெளியிடுவதோடு இனத்தைப் பாதுகாக்கும் பணியை அவை முடித்துக் கொள்கின்றன.

அண்மையில் உலகத் தமிழ்ப் பண்பாட்டியக்க மாநாட்டிற்கு, தமிழீழத்திலிருந்து வந்திருந்த என் நண்பர்கள் திரு. இராசமனோகரன் அவர்களும் திரு. வேந்தனார் இளங்கோ அவர்களும் தமிழக ஏடுகளின் இந்த இழிநிலை பற்றிக் கேட்டபோது நான் அப்படிப்பட்ட ஏடுகள் தமிழீழத்தில் நுழையாமல் தடுக்க முயற்சிகள் எடுங்கள் என்று கேட்டுக் கொண்டதோடு, தென்மொழி பற்றியும் தங்கள் பணி பற்றியும் நான் அறிந்தவரை விரிவாகச் சொல்லி அவர்கள் கட்டாயம் உங்களை நேரில் காணவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டேன். அவர்களும் மிகுந்த ஆவலோடு வந்து தங்களைப் பார்த்ததால் 'ஈழத்தமிழரின் இன்றைய நிலை' அனைத்துத் தென்மொழி அன்பர்களுக்கும் தெரிந்து கொண்டிருக்கிறது. திரு வேந்தனார் இளங்கோவின் 'ஈழத்தமிழரின் பொருளியல் குமுகாயப் பின்னணி' கட்டுரையையும் தொடர்ந்து வெளியிடுங்கள் என்றும் கேட்டுக் கொள்கிறேன். தென்மொழி அன்பர்கள் இதன் மூலமும் ஈழத்தமிழரின் உண்மை நிலையைப் பொதுமக்களுக்கு எடுத்துச் சொல்லக் கடமைப் பட்டுள்ளார்கள். இதோடு தென்மொழி இயக்கத்

தைச் சார்ந்த நாம் தமிழீழத் தலைவர்களைத் தமிழகத்திற்கு அழைத்து உண்மை நிலையை மக்களுக்கு எடுத்துச் சொல்லி ஆதரவு திரட்டப் பொது நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

குறிப்பாகத் தமிழகத்திற்கு ஓரளவு அறிமுகமானவரான உணர்ச்சிப் பாவலர் காசி ஆனந்தனை இங்கு வரவழைக்க வேண்டும் (இவர் இந்திராவின் மிசாக்கொடுமையைக்காட்டிலும் நூறு மடங்கு கொடியதான சிறிமாவின் கொடுமைகளைப் பெற்றவர் உசாவலின்றியே கொடுமைகளுக்குப் பெயர் பெற்ற வெளிக்கடைச் சிறையில் நான்காண்டுக்காலம் அடைக்கப்பட்டு அண்மையில் விடுதலையானவர். அத்தனைக் கொடுமைகளுக்கும் ஆளாகி அவர் உயிரோடு உலாவுகிறார் என்றால் அது தமிழ்த்தாயின் அருள் என்று தான் நம்புகிறேன். "வெளிக்கடைச்சிறை எனக்கு வெண்ணிலா அறை" என்று பாடிய அவரைத் தமிழ்த்தாய் இன்னும் பல்லாண்டுக் காலம் பாதுகாக்க வேண்டும்.)

ஈழத்தமிழர்களின் நேரிய உரிமைகளுக்காக, மாந்த உரிமைகளுக்காக இலண்டனில் இருந்து போராடும் தமிழர்களுக்கும் மடல்கள் மூலம் ஊக்கத்தையும், ஆர்வத்தையும் ஏற்படுத்த வேண்டும். தென்மொழி இயக்கத்தினரும் தமிழன்பர்களும் இதற்காகக் கீழ்க்காணும் முகவரிகளில் உடனடித் தொடர்பு கொள்ள வேண்டும் என்பதோடு தென்மொழி விற்பனையைப் பெருக்குவதும் தேவை என்று விரும்பித் தாள்பணிந்து கேட்டுக் கொள்கிறேன்.

1) தமிழர் விடுதலைக் கூட்டணி
238, பிரதான வீதி, யாழ்ப்பாணம், இலங்கை.

2) பாவலர் காசி ஆனந்தன்
அமிர்தகளி, மட்டக்களப்பு அஞ்சல், இலங்கை (கிழக்கு)

3) EEZHA VIDUTHALAI MUNNANI, 35, PRIOLO ROAD, LONDON-SB-7, U.K.

—பரிமளாமணாளன். பூளைமேடு-641004.

## கைவிடப்பட்ட மனைவிகளும் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளும்

ம: 219: தென்மொழி சுவடி 14, ஓலை 10-இல் திரு. பூங்காவனம் க.மு. அவர்கள், தமிழகத்தில் அருகிபாவது கைவிடப்படும் குழந்தைகளும் மனைவியரும் இருந்தனா எனக் குறிப்பிட்டுள்ளார். என் கட்டுரையில், மனைவியை வேண்டுமென்றே கைவிட்டு மீண்டும் ஏற்றுக்கொள்ள மறுக்கும் கணவன்மார் என்றும் குழந்தைகளைக் கண்டவிடங்களில் போட்டுவிட்டுப் போய்விடும் பெற்றோர் என்றும் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன்.

வையாவிக் கோப்பெரும் பேகன் தன் மனைவியை இழிவாகக் கருதி ஒதுக்கவில்லை; மீண்டும் ஏற்றுக்கொள்ள மறுக்கவுமில்லை.

(அட்டை 3-ஆம் பக்கம் பார்க்க)

அம்மி மிதித்து அருந்ததி காட்டி அங்கியை வலம்வந்து வாழ்விலும் தாழ்விலும் உன்னைக் கைவிடமாட்டேன் என்று உறுதி பூண்டும், (பாணிக்கிரகணம்) சீதையை மணந்துகொண்ட இராமன், அனலிடை மூழ்கி வெளிவந்த கற்பின் கனலியைக் காட்டுக்குத் துரத்தியதை ஒப்பிடுக. 'நின்பிரிவினும் சுடுமோ அப்பெருங்காடு' என்றுரைத்த சீதையின் உண்மையன்புக்குக் கிடைத்த பரிசு இது. பேகனுக்கு அறிவுரை கூறி மனைவியொடு கூடிவாழச் செய்ய கபிலர் பரணர் போன்ற பெருமக்கள் முன்வந்தது போன்று இலக்குவன் பரதன் அநுமன் ஆகியோர் முன்வராதது ஏன்? மகளிர் அஃறிணைக்கு ஒப் பாகக் கருதப்பட்டதேயன்றோ? இராமனைக் காட்டுக்கு அனுப்பிய போது கொதித்தெழுந்த இலக்குவன் சீதையைக் காட்டுக்கு அனுப்பிய போது என்ன ஆனான்?

இலக்கியம் அம்மொழியினரின் பண்பாட்டைப் படம் பிடித்துக் காட்டும். ஆரியத் தாக்குதலற்ற இலக்கியங்களில்தான் தமிழ்ப் பண்பாட்டின் தனிக்கூறுகளைக் காணவியலும். சிவனியத் தமிழ் ஆகமங்களைத் தலைமையாகக் கொள்ளாமல், வேதங்களைத் தலைமை யாக ஏற்றுக்கொண்ட இடைக்காலச் சிவனியத்தொன்ம நூலான பெரிய புராணத்தில், பத்திமைப் பெருக்கை ஆயும் நிகழ்ச்சியாகச் சுட்டப்படும் பிள்ளைக்கறி சமைத்தலைச் சான்று காட்டல் பொருந் தாது. படைக்கும் ஆற்றலிருப்பதால் இறைவன் அழிக்கச் சொல் கிறான் என்பர் சிவனியர். அந்நிகழ்ச்சியில் குழந்தை மீண்டும் உயிர்த்தெழுகிறது. யான் குறிப்பிட்டது, ஒழுக்கக்கேட்டை மறைக்கும் பொருட்டு குழந்தைகளைக் கண்டவிடங்களில் விட்டுச்செல்லும் ஆரிய வழக்கம் என்பதனையும் தெளிக. கேரள நம்பூதிரிகள் நாயர் மகளி ருடன் கூடிப்பெற்ற பிள்ளைகளைத் தம் குழந்தைகளாக ஏற்பதில்லை. கீரிப்பிள்ளை, பூனை, கிளி ஆகிய அஃறிணை உயிரிகளையும் ஓடும் பிள்ளை, நடக்கும் பிள்ளை, பறக்கும் பிள்ளை எனக் குழந்தைகளாகக் கருதி வளர்த்த தமிழர், தம் குழந்தைகளைக் கைவிடுவாரல்லர்.

—இரா. மதிவாணன், க.மு.

---


# வயிர மூக்குத்தி

(நாடகச் செய்யுள்)

- ஆசிரியர்: இறைக்குருவனார்.
- தென்மொழியில் தொடர்ந்து வெளிவந்து நேயர்களைக் கவர்ந்தது.
- மொழிநூல் மூதறிஞர் பாவாணர் அவர்களின் அணிந்துரை கொண்டது.
- வரலாறு தழுவிய பாவியல் நாடகம்.
  விலை: உருபா 2-00.

கிடைக்குமிடம்

ஆசிரியர், இறையகம்,
2, மேற்கு அரசர் தெரு
West Raja St,
சென்னை-600016.

தென்மொழி புத்தக
விற்பனை நிலையம்,
51, அருணாசல (ஆசாரி)த் தெரு,
சென்னை-600005.

0.578: அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தென்மொழிப் பாவலரேறு ஐயா அவர்களுக்கு, வணக்கம், வாழ்க. எங்கள் தனித் தமிழ்க் கழகத் தொடக்க விழாவில் தாங்கள் நிகழ்த்திய தூய தமிழ்ப் பொழிவு என்னை மிகவும் கவர்ந்தது. 5—3—78 அன்றுதான் தங்களுரையை முதன்முறையாகக் கேட்கும் வாய்ப்பினைப் பெற்றேன். ஓர் இலக்கியக் கூட்டம் இரவு 11-45 வரை நடந்ததும், அவையோர் பெரும்பாலோர் இருந்து சுவைத்துணர்ந்து கேட்டதும் புதுச்சேரியில் இதுவே முதன் முறை. தங்கள் வருகை புதுவரலாற்றை எழுதிவிட்டது. ‘தனித்தமிழ்க் கழகம் குன்றிலிட்ட விளக்கென ஒளிவிட வேண்டும்; அதற்கு அனைவரும் ஆதரவு தரவேண்டும்’ என்று தாங்கள் வழங்கிய வாழ்த்து எங்கள் உள்ளங்களை மகிழ்வித்தது; புது ஊக்கங் கொடுத்தது. பாவாணர் பற்றித் தாங்கள் கூறிய செய்திகள் எங்களைப் பெருமைப்பட வைத்தன. எங்கள் நிகழ்ச்சியில், எதிர் பாராமல் கலந்துகொண்ட திருவாளர்கள் தி. நா. அறிவுஒளியும், தென்மொழி நித்தலின்பனும் சிறப்புற உரை நிகழ்த்தியது மனநிறை வைத் தந்தது. தங்களின் உரைகேட்கப் புதியவர் பலரும் வந்திருந்தனர்; வந்தவர் கேட்டுச் சுவைத்து வியந்தனர்; பாராட்டினர். வர இயலாதவர். இயலாமைக்கு வருந்தினர். விழா முடிந்த சில நாட்கள் வரை தங்கள் உரையினைப் பலரும் பாராட்டிக்கொண்டே இருந்தனர், மீண்டும் கேட்க அவர்கள் விழைகின்றனர். அடுத்த வாய்ப்பினை ஏற்படுத்த முயலுவோம். அன்புநிறை,

— தமிழநேயன், தலைவர், தனித்தமிழ்க் கழகம், புதுச்சேரி.

0:579: அன்புகொண்ட எம் தலைவர் ஐயா அவர்கட்கு;

தென்மொழியின் குறிக்கோளை எல்லாக் கட்சியினரும் எதிர்க்கிறார்கள். அவர்களிலே காணியம் ஏதுமின்றிக் குறை கூறுபவர்கள் உண்டு. பிரிவினை தேவை என்று உணர்ந்தாலும் ஒரே இந்தியப் பித்த மயக்கம் மறுகக்ச் சொல்கிறது. பிரிவினையை ஒப்புக் கொண்டால நம்முடைய கட்சிக்கு வேலையில்லையே என்று நடுங்குவோரும் உண்டு. தம்முடைய பிழைப்பு நடக்கவேண்டுமே என்று சில அரை வேக்காட்டு அரசியல் நடத்தும் கோமாளிகள் நாங்கள் அ.இ. என்று கூறிக்கொண்டிருக்கின்றனர். பிரிவினை உயிர்; திராவிட நாடு பெறுவோம் என்று மார்தட்டிய பேர்வழிகள் போட்டி போட்டுக் கொண்டு நாங்கள் அப்பொழுதே அக்கொள்கையைக் கைவிட்டு விட்டோம் என்று கூறும் தொடை நடுங்கிகளும் உண்டு. பாவேந்தரின் விடுதலைப் பண்ணை மேடை அழகிற்காகக் கூறிய சிலர் திரைப்பட சுவைஞர்களாக மாறியும் விட்டார்கள். இவற்றை எல்லாம் மனத்தில் எண்ணும் பொழுது எத்தனைப் பாவேந்தர், பாவலரேறு வந்தாலும் தங்களுடைய வாழ்க்கையைப் பாழ்படுத்திக் கொள்ளத்தான் வேண்டும்; வேறு ஒன்றும் செய்துவிட முடியாது என்ற எண்ணம்தான் மேலெழுகின்றது.

தென்மொழி தமிழ் நாட்டுப் பிரிவினையில் நம்பிக்கை வைத்த நாள்முதல் இன்றுவரை ஆதரவைப் பெருக்கிக்கொண்டுதான் வருகின்றது. பல இன்னல்களுக்கிடையில் தோல்வியின்றித் தொய்யாது வீரநடை போடுகின்றது. தென் மொழியின் விடுதலைப் பண்ணிலே உள்ளத்தைப் பறி கொடுத்தவர்கள் நிறையபேர் இருக்கின்றார்கள். தேசியப் போர்வையில் இன்றில்லாவிட்டால் நாளை—நாளைமறுநாள் தமிழகத்தின் விடுதலைக்கு இன வழியாக மொழிவழியாக அரசியல் உணர்ச்சி வழியாகப் பெரும் பட்டாளம் “தமிழ்நாடு தமிழருக்கே” என்று வீர முழக்கம் செய்திடும் காட்சியினை உலக வரலாற்று ஏடுகளிலே காணப் போவது உறுதி! —தமிழ்க்கதிர், திருக்கழுக்குன்றம்.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005 (தமிழகம்).